உ





# ஞானச்சுடர்

## மாசி மலர் 2002

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ
சிவமயம்



# குறள் வழி

" சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப(து) அறிவு "

பொருள் :

மனத்தை அது சென்ற வழியே செல்ல விடாது கருமத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீமையினின்றும் நீக்கி நல்லதன் கண் செலுத்துவது அறிவு.



உ

# நற்சிந்தனை

## கிளிக்கண்ணி


வகைவகையாய்ப் பச்சரிசி — கிளியே
வாழைக்குலை தேங்காய்கள்
உவகையுடன் கொண்டுவந்து — கிளியே
உதவுகிறார் பார்த்திடடி

கர்ப்பூரப் பெட்டிகளும் — கிளியே
கட்டுக்கட்டாய்க் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும் — கிளியே
பொலியுதடி வீதியெல்லாம்

கண்டாயோ கார்மயிலே — கிளியே
கந்தன்விளை யாட்டுக்களை
மண்டலங்கள் நடுங்குமடி — கிளியே
மணியோசை கேட்குதடி

[ வளரும் ...

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு — 2 சுடர் — 50

2002 மாசி

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| செல்வச்சந்நிதிப் பெருமானின் ஆலயத்தில் ... ... | 1 - 3 |
| ஸ்ரீ முருக மந்திரம் | 4 - 6 |
| சிந்திப்போம் செயற்படுவோம் | 7 - 9 |
| 21ஆம் நூற்றாண்டில் ஈழத்து இந்து ...... | 10 - 12 |
| மாசி மகம் | 13 - 15 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் ...... | 16 - 17 |
| சைவத்திருமுறைகள் | 18 - 20 |
| குரும்பை நகர் தந்த கரும்பு மனிதன் | 21 - 22 |
| சக்தி வழிபாட்டின் சிறப்பு | 23 - 25 |
| வாழ்க்கையிற் சைவத்தின் முக்கியத்துவமும் ...... | 26 - 29 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்..... | 30 - 33 |
| அன்னப்பணிக்கு ஆதரவு நல்கிவரும் ..... | - 34 |
| ஞானச்சுடர் வாசகர் போட்டியில் ... ... | - 35 |
| மாபெரும் கௌரவிப்பு விழா | 36 - 37 |
| சந்நிதியான் | 38 - 41 |
| மணி விழாக்காணும் யாழ் பல்கலைக்கழக ...... | 42 - 43 |
| முருகேசு சுவாமிகளின் ஐந்தாவது ...... | - 44 |

அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபாற்செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினர்.

அச்சுப்பதிப்பு: அச்சகம் சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

# சுடர் தரும் தகவல்

நாணயத்திற்கு இருபக்கங்கள் இருப்பது போல வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறிவந்து செல்லும் என்பது பொதுவாக சராசரி மனிதன் ஒருவன் உணர்ந்து கொள்ளுகின்ற கருத்தாகும்.

அனைவரது வாழ்க்கையிலும் இவ்வாறான இயல்பு இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் இவ்வாறு இன்பமும் துன்பமும் கலந்து தான் வாழ்க்கை என்பதைப் புரிந்து கொள்ளமுடியாத சில அன்பர்களையும் நாம் சந்திக்கின்றோம் இது அறியாமையின் வெளிப்பாடாக இருக்கலாம்

இன்னும் சிலர் இன்பம் துன்பம் என்பவற்றின் காலச்சக்கரத்தை விளங்கிக்கொண்டாலும் துன்பத்தை மட்டுமே பெரிதுபடுத்தி வாழ்க்கையில் துவண்டு போகின்றவர்களையும் காண்கின்றோம்.

இவற்றிற்கு மேலாக ஒன்றன்பின் ஒன்றாகப் பல துன்பங்கள் ஏற்பட்டோ அல்லது மிக மோசமான துன்பங்களுக்கு உட்பட்டு துன்பச்சுமைகளைத் தாங்க முடியாது வாழ்க்கையின் விளிம்பிற்கே செல்லுகின்ற அன்பர்களையும் பார்க்கின்றோம்.

அதிலும் மற்றவர்களுக்கு துன்பம் விளைவிக்காது கடமை உணர்வும் இறைபக்தியும் கொண்டவர்களாக உள்ள அன்பர்களுக்கு இவ்வித சோதனைகள் அல்லது வேதனைகள் ஏற்படும் பொழுது அவர்கள் தமக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு விளக்கம் தெரியாது வேதனைப்பட்டு தத்தளிப்பதையும் பார்க்கின்றோம். இத்தகைய நிலை பலரையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகின்ற நிலையாகும்.

இத்தகைய நிலையை ஆராய்ந்தால் நாம் இதை விட மோசமாக ஏற்பட இருந்த துன்பத்திலிருந்து அல்லது ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றோம் என்பது பொருளாக இருக்கலாம். அல்லது இறைவன் எம்மை இரட்சிக்கின்ற சூழ்நிலைக்கு நாம் இறைவனை நெருங்கிவிட்டோம் என்பதன் அறிகுறியாகவும் இருக்கலாம்.

இதனை வேறு வார்த்தையில் கூறுவதானால் எமக்கு ஏற்பட்ட சோதனை அல்லது அந்த மோசமான துன்பத்தினால் ஏதோ ஒரு வகையான நன்மை எமக்கு உண்டென்பதே கருத்தாகும்.

உ

# 'ஞானச்சுடர்'
# தை மாத வெளியீடு

இந்த வருடத்திற்கான முதல்மலரான தைமாத மலருக்கான மதிப்புரையை ஆசிரியர் ஆ. சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள். பேரவையின் நிகழ்வுகளுக்குப் பங்களிப்புச் செய்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இந்த மலர் வெளியீட்டுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டமை சிறப்பாக அமைந்திருந்தது.

உடற்பசி, உளப்பசி ஆகிய இரண்டையும் போக்குவதே உண்மையான தொண்டு. இதுவே முருகனுக்கு விருப்பமான தொண்டு இதனை இந்த ஆச்சிரமமும் பேரவையும் மேற்கொள்வது மிகவும் சிறப்பான விடயம் என்பதைத் தனது ஆரம்ப உரையிற் குறிப்பிட்டார்கள்.

ஒவ்வொரு மனிதனிடமும் தெய்வீகத்தன்மை காணப்படுகின்றது. இந்தத்தன்மை வெளிப்படையாகவும், பெரிய அளவிலும் எமக்குத் தென்படாவிட்டாலும் அடிமனத்தில் மறைந்திருக்கின்றது. அவற்றை எல்லாம் வெளிப்படுத்துவதற்கு, தூண்டிவிடுவதற்கு ஞானச்சுடர் அளப்பரிய செயற்பாடுகளைச் செய்துவருவதையும் திரு. சிவநாதன் அவர்கள் எடுத்து விளக்கினார்கள்.

யோகர்சுவாமிகளின் உடல் இல்லா விட்டாலும் அவரின் ஆத்மீக சிந்தனைகளை ஞானச்சுடர் ஒவ்வொரு மாதமும் தாங்கிவந்து எமது மண்ணின் சிறப்பை உலகம் முழுவதும் பரப்பிக்கொண்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

இறுதியாக ஞானச்சுடரில் இடம் பெற்ற ஒவ்வொரு கட்டுரை பற்றியும் மேலோட்டமாகத் தனது மதிப்புரையை நிகழ்த்தினார்கள்.

உ

# முருகன் நாமம் எனது மந்திரம்

முருகன்நாமம் ஒன்றேதான் எனது மந்திரம் - அந்த
முதலவனைச் செபிப்பதுதான் எனது வந்தனம் - மால்
மருகன்பாதம் ஒன்றேதான் எனக்கிவண் துணை - புள்ளி
மயிலோன்புகழ் பாடுதலே எனக்கிவண் வினை.

குகன்மடம் ஒன்றேதான் எனது இருப்பிடம் - அவர்
கோவில்கொண்ட தலந்தான் எனது தரிப்பிடம் - உமை
மகன்சந்நிதி யிலேதான் மேவும் பேரின்பம் - இந்த
மேதினியில் வேறெங்கும் வேண்டேன் வேறின்பம்.

கந்தன்வேல் என்றுதான் காலன்அஞ்சும் பெரும்படை - யான்
காணுகின்ற யாவுமே காட்சிதரும் வெறும்படை - பெருஞ்
சொந்தம் எனில்அது சேந்தனோடுற்ற உறவுதான் - என்
சீவியம் ஏற்றது அவர்சொன்னபடி அறவுதான்.

'அஞ்சேல்' என அபயந்தரும் ஈராறு கரங்கள் - தம
தடியார்க்கு வழங்குவார் அற்புதமான வரங்கள் - பெரும்
அஞ்சாநெஞ்சன் அவுணர் தனித்தலைவன் சூரனை - அழித்
தமரர்குலங் காத்த தெய்வத்திற்கெவரும் நேரிலை.

உடைமை என்பது இக்காவியுடை ஒன்றுதான் - என்
கடமை என்பது கோவிற்சரியைத் தொண்டுதான் - வருந்
தடைகள் விரட்டுபவர் தயாளன் சேயன்தான் - உடல்
தளர்ந்தபோதும் அணைப்பவர் தரும நாயகன்தான்.

நித்தியபூசை காண நெஞ்சில்நிறையும் நிம்மதி - அந்த
நிமலன்அறு முகம்தோன்ற விலகியோடுந் துன்மதி - கலைச்
சித்தன் மைந்தன் எழில்காண வேண்டுங்கண் ஆயிரம் - சுரர்
தேவன், மா வீரன்பற்றித் தீட்டுவேன் பாயிரம்.

- மோ. ஷாந்தன் சத்தியகீர்த்தி

## மாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. ந. ஜவகர்லால் நேரு
( கனடா )

திரு. பொ. இராமலிங்கமூர்த்தி
( மின் அத்தியச்சகர் மின்சாரப் பகுதி )

திரு. த. விவேகானந்தன்
( சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை )

திரு. க. யோகேந்திரநாதன்
( கிராம உத்தியோகத்தர் - குடத்தனை )

திரு. N. இரவீந்திரன்
( மக்கள் வங்கி உதவி முகாமையாளர் உரும்பராய் )

திரு. நா. சந்திரசேகரம் ( பொருளாளர் )
( வேவிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், அல்வாய் )

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பு நிலையம்
( K. K. S. வீதி யாழ்ப்பாணம் )

திரு. செ. சந்திரமூர்த்தி
( தலைவர், உடுப்பிட்டி ச. ச. நிலையம் )

திரு. அ. த. க. கிருஸ்ணராஜா
( சமாதான நீதவான் உரும்பராய் )

திரு. சி. பஞ்சலிங்கம்
( ஞான வைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு )

செல்வி தெவேந்திரா சௌமியா
( ஒஸ்கா வீதி, உரும்பராய் )

திரு. சி. பத்மநாதன் J. P
( கனன் போட்டோ பிரதி நிலையம், பருத்தித்துறை )

திருமதி கனகராசா
( அதிபர் அச்சுவேலி மகா. வித்தியாலயம் )

திரு. பொ. ஸ்ரீஇராமச்சந்திரன்
( பொது முகாமையாளர் வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச. )

திரு. செ. அப்பாத்துரை
( இளைப்பாறிய கூ. ச. முகாமையாளர் இருபாலை )

திரு. இ. குமாரதாசன்
( பிராந்திய மருந்தாளர் பி. சு. சே. ப. பணிமனை யாழ். )

இயக்குநர்
( குகன் கல்வி நிறுவனம் – ஆவரங்கால் )

திரு. தா. கெங்காதரன்
( கஜன் மோட்டோர்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ் )

திரு. சி. குகதாஸன்
( தேவாலய வீதி, சங்கானை )

உரிமையாளர்
( உதயா பேக்ஹவுஸ் வல்லை வீதி, சங்கானை )

தலைவர்/ செயலாளர்
( விநாயகர் சனசமூக நிலையம் பத்தமேனி )

திருமதி சுரேந்திரநாதன்
( அதிபர் கெருடாவில் இ. த. க. பாடசாலை )

அதிபர்
( தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம் )

திரு. D. M. வேதாரணியம்
( ஆசிரியர், கரணவாய் கிழக்கு )

திரு. V. S. P. குமார் ( ஸ்ரீகுமார் )
( உரிமையாளர், கல்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி )

நிர்வாகி
( ரலன்ற் கல்வி நிறுவனம், கரவெட்டி )

திரு. கா. இராமஜெயம்
( ஆசிரியர், கரணவாய் மத்தி )

திரு. சி. கணேஸ்
( சிதம்பரப்பிள்ளை - புத்தகசாலை, நெல்லியடி )

திரு. செ. தயானந்தன்
( ஹம்சா, உருக்கு வடிவமைப்பாளர், உடுப்பிட்டி )

திரு. வ. நந்தகுமார்
( அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு )

உரிமையாளர்
( ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி )

திரு க. இரத்தினசிங்கம் J. P.
( கிராமசேவையாளர், கரணவாய் மத்தி )

திரு. க. குணலிங்கம்
( கரணவாய் மத்தி )

உ

# செல்வச்சந்நிதிப் பெருமானின் ஆலயத்தில்
# இரு திண்ணைகள்

> முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம் <

முருக பக்தர்களே, நீங்கள் செல்வச்சந்நிதிக் கோயிலுக்குப் பலமுறை சென்றிருப்பீர்கள். சிலர் இப்போதுஞ் சென்று தரிசிக்கிறீர்கள். கோயிலின் கிழக்கு வாசலிலே வடக்குப் புறமாக ஒன்றும் தெற்குப் புறமாக ஒன்றுமாக இரு விசாலமான திண்ணைகளைப் பார்க்கிறீர்களல்லவா. இத்திண்ணைகள் வாசலிலே அமைந்திருத்தல் பற்றி யாராவது யோசித்தீர்களா? சிலர் இத்திண்ணைகளைத் தொட்டுக் கண்ணிலொற்றிக் கும்பிடுகிறார்கள், வேறுசிலர் நல்ல நறுமலர்களைத் தூவிக் கும்பிடுகிறார்கள் இவற்றின் வரலாறுதான் யாது? என்று அறிதல் அவசியமல்லவா? திருவாசகம் பாடிய மாணிக்க வாசக சுவாமிகள் அவர்கள் தாம்பாடிய திருப்பள்ளி எழுச்சியில் 'கேட்டறியோமுனைக் கண்டறிவாரை' என்று பாடியுள்ளார் வேறு சிலரும் அப்படித்தானே பாடியுள்ளனர். ஆனால் சந்நிதியின் தொன்மையான வரலாற்றில், முருகப்பெருமான் தமது மெய்யன்பராகிய மருதர்கதிர்காமருடன் நேராகக் கதைத்ததாகவே அறியக்கிடக்கின்றது.

முன்னரே முருகப்பெருமானின் திருவடிக்குப் பூசை செய்த முனிவரொருவர், இப்போதிருக்கும் பெரிய பூவரசின் அயலிலே சமாதியடைதலும், முனிவரின் அடியார்கள் முனிவர் பூசித்த இடத்தை மையமாகக் கொண்டு வணங்கிவந்ததோடு அதைச் சுற்றி ஒரு கோயிலுங் கட்டி வழிபட்ட காலத்தில், ஒல்லாந்தர் அக்கோயிலை இடித்துத் தள்ளினார்கள் அதனால் முருக பக்தர்கள் பெரும் விசனமடைந்து முருகனுக்கு முறையிட்டனர். முருக மூர்த்தி அவ்வடியவருள் ஒருவராகிய மருதர் கதிர்காமர் என்பவரது கனவில் தோன்றி '' அன்பனே கவலையை ஒழி, முன் கும்பிட்ட அதேயிடத்தில் பயறு, அவல், அன்னம், இளநீர் நிவேதித்துப் பூசையைச்செய். நிவேதனப் பொருட்களை நீயுமெடுத்து வந்தவர்களுக்கும் அள்ளிக்கொடு '' என்று சொல்லி மறைந்தருளினார்.

கனவு கண்ட கதிர்காமர் மிக மகிழ்ச்சியடைந்து பெருமான் கனவிற் கூறியவாறே நிவேதித்துப்பூசை செய்து வந்தார். ஆயினும், மந்

காலம் பொன்னைவிட அதிகமான மதிப்புடையது.

திரமொன்றுமில்லாமல் பூசை செய்வதில் அவரது மனந்திருப்தியடைய வில்லை குறித்த வாசலிலுள்ள தெற்குத்திண்ணையில் படுத்தபடியே பலவாறாக எண்ணலானார். அவருக்கு நித்திரை வரவில்லை.

அற்புதம்:- அந்த நேரம் பார்த்து அதன் வடபுறமுள்ள திண்ணையில் படுத்திருக்கும் ஒரு இளம் மனிதனைக் கண்டார் கதிர்காமர். அம்மனிதர் வடபுறத் திண்ணையிற் படுத்த படியே " கதிர்காமரே உமது உள்ளக்கிடக்கையை யானறிவேன்; உமக்கேன் மந்திரம்! உமது வாயினை ஒரு துணியினாற் கட்டியபடி மௌனியாய் என்னைத் தியானித்தபடியே பூசையைச் செய் " என்று திருவாய் மலர்ந்தருளினார். கதிர்காமருக்குப் பெருஞ் சந்தோஷம். நம்பவே முடியவில்லை முருகன் தானே தனக்கு இவ்வாறு வாக்களித்தார் என்பதையறிந்த கதிர்காமர் மெய் சிலிர்த்துக்கண்ணீர் மல்க அதை உபதேசமாகக் கொண்டு வாயைக் கட்டி, தினமும் பூசை செய்து வரலானார். அந்தக் காலத்திலேயே சந்நிதியான் பேசுவதாக, அறிந்து நாலா திசைகளிலிருந்தும் அடியார்கள் கூட்டம் கூட்டமாக வரத்தொடங்கி விட்டார்கள். சில மாதங்களாகவே அன்பர் கதிர்காமருக்கு வேறுமொரு வியா கூலம் மனத்தைத் துன்புறுத்தி வந்தது. மூலத்தானத்தில் திருவுருவமில்லாமையே அந்தத்துன்பம். வழக்கம் போல் கதிர்காமர் வாசல் திண்ணையில் இதே நினைவுடன் படுத்திருந்தார். நேரமோ வைகறையாய் விட்டது. வடபுறத் திண்ணையில் படுத்திருந்த முருகவேள், கதிர்காமரின் கண்ணைக்கட்டி, திரும்பவும் அவிழ்த்தார். என்ன அதிசயம்! விழித்த கதிர்காமர் கதிர்காமத்தையே கண்டு உள்ளம் நெக்கு நெக்குருகி அழுதார். வேண்டுவார் வேண்டுவதே ஈந்தருளுவது தானே இறைவனது இயற்கைக்குணம். அன்பர் கதிர்காமரது திருக்கரத்தில், கதிர்காமத்திருத்தலத்திலிருந்து ஒரு வடிவேல் வழங்கப்பட்டது மீண்டும் முருகனால் அவரது கண் கட்டப்பட்டது பின் அவிழ்க்கப்பட்டபோது சந்நிதிக் கோயிலிலேயே நிற்பதைக்கண்டு அதிசயப்பட்ட கதிர்காமர், அவ்வேலையே தான் பூசை செய்யுமிடத்தில் தாபித்து அபிஷேகித்து, அன்னம், பயறு அவல் எல்லாம் படைத்து இளநீரால் அவி சொரிந்து, பூசை செய்ததுமன்றி, படைத்த அன்னம் ஆதியனவற்றை யாவருக்கும் மனமார கையார வாரி வழங்கியும் வந்தார். அன்று தொடக்கம் கதிர்காமரும், ஏனைய அடியார்களும் சந்நிதிக்கோயிலில் அன்னதானத்தைத் தினமும் நடத்தி வரலாயினர். கதிர்காமர் முருகன் திருவடி நீழலடைந்த பின் அவரது சந்ததியார் பூசகர்களாய், குருக்களாய் நித்திய நைமித்தியங்களைச் செய்து வருகின்றனர். முப்போதுந் திருமேனி தீண்டும் பேரந்தணர்கள். அன்னதானக்கந்தன் என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்ற சந்நிதிக்

பொறாமை பொல்லாததொரு தீயசக்தி.

கந்தன் தன்னை வழிபடுபவரின் துன்பத்தை இலேசாகத் தீர்த்து விடுகிறான் என்பதை யாவருமறிவர். கைமேற் பலன் கிடைக்கிறது.

முருக தலங்களைப் பற்றியோ அல்லது வேறெந்தத் தலங்கள் பற்றியோ நாம் பாகுபடுத்திப் பேச எமக்கென்ன தைரியமிருக்கிறது. ஆனால் சில தலங்கள் நிலத்தின் ஆழத்திலிருந்து தண்ணீர் வருவது போலவும் வேறு சில வெட்டி இடைநடுவில் தண்ணீர் வருவது போல வும் இருக்க, சந்நிதியில் வெட்டுமிடமெலாந் தண்ணீர் வருவது போலவும் அருட்பிரவாகம் காணப்படுகிறதென்றால் யாரும் மறுக்க மாட்டார்களல்லவா?

இவ்வாலயத்தின் மகோற்சவ காலப்பகுதியிலே, கதிர்காமத்திலி ருந்து வேற்பெருமான் வருவதையும், பின் திரும்பிப்போவதையும் குறித்த அந்த அற்புதத்தை மூலமாகக் கொண்டே ஆண்டாண்டு தோறும் திருவிழா நடத்தி வருகிறார்கள். இந் நிகழ்ச்சியைப்பார்த்த பல பேரன்பர்கள் அந்நேரம் அவ்வேலின் அருட்பிரவாகத்தையும் திருப்பொலிவையும் கண்டு பேரானந்தங் கொண்டதாக, என் காதா ரக் கேட்டேன்.

ஆகவே மெய்யன்பர்களாகிய அடியார்களே, பூசு நீறு போன்ற புனித உள்ளத்தோடு சந்நிதியானின் பாதகமலங்களில் பூரண சரணாகதியடைந்து நல்லன எல்லாவற்றையும் பெற்று உய்தியடை வீர்களாக.

## மாற்றம்

ஏற்றம் கண்டு எம்மினம்
உரிமைகள் பெற்று
சுற்றம் சூழ சுதந்திரமாய்
இனிதே வாழ
மாற்றம் பல யருளி
மங்களமும் தருவயே
ஆற்றம் கரை யுறை
செல்வச்சந்நிதி யானே

/ இராம ஜெயபாலன் /

தோல்வியைக்கண்டு துவண்டு விடாதீர்கள்.

உ

# ஸ்ரீ முருக மந்திரம்

## கூறா உலகம் குளிர்வித்தவனே

ஃ சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஃ



இறைவனுடைய பரிக்கிரகசக்தியாகிய மாயையில் இருந்தே, முப்பத்தாறு தத்துவங்களும் தோற்றம் பெற்றன. சைவ சித்தாந்த தத்துவம் ஒன்று தான் முப்பத்தாறு தத்துவங்களையும் அவற்றைக் கடந்து அப்பாலுள்ள பரமுத்தியையும் எடுத்துக் கூறுகிறது. ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைக்கிறது. மாயை ஆன்மாவின் அறிவைவிளக்குகிறது. மாயையில் இருந்து தோற்றம் பெறுகின்ற தத்துவங்கள் ஆன்மா அறிவைப்பெறுவதற்குத் துணை செய்கின்றன. மாயையின் துணையினால் ஆன்மா பெறும் அறிவானது பூரணமானஞானமாக இல்லாவிட்டாலும், விடியும் வரையும் இருளைப் போக்கச் சிறு விளக்கு உதவுவது போலப்பயன்படும் என்பதை,

"விடிவாமளவும் விளக்கணைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து"

எனத் திருவருட்பயன் இதனை விளக்குகிறது சிவதத்துவங்கள் ஐந்தும் ( சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், விந்து, நாதம் ) வித்தியா தத்துவங்கள் ஏழும் ( காலம், நியதி, கலை, வித்தை, அராகம், மூலப்பிரகிருதி, புருடன் ) ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கும்

(பஞ்சபூதங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், தன்மாத்திரைகள், அந்தக்கரணங்கள்) மாயையில் இருந்து தோற்றம் பெறுகின்றன என்றே சைவசித்தாந்தம் கூறுகிறது. இந்த முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து அவற்றுக்கு அப்பாலுள்ள சாயுச்சிய நிலையை அடையும் பேற்றைப் பெறுதலே உயர்ந்த பேறாகும்.

கோபித்து வந்த சூரபத்மாவை அழித்து, தம்மிடம் துன்பத்தைக் கூறி முறையிட்ட தேவர்களின் உலகத்தைக் குளிரச் செய்து, அவர்களுக்கு அபயம் கொடுத்து முருகப்பெருமானே காப்பாற்றினார். இவ்வாறு தஞ்சமென வந்த அடியார்களுக்கு அருள் செய்து ஸ்கந்த சாயுச்சியத்தைப் பெற வழி செய்யுமாறு அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் வேண்டுவதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

ஆறாறையும் நீத்ததன் மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமாறுளதோ
சீறாவரு சூர் சிதைவித்திமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே

சீவபோதம் அற்றுச் சிவபோதத்துள் அடங்கி, மெய்யுணர்வால் அறிகின்ற அறிஞர்களே சிவஞானிகள் ஆவார்கள். சிவஞானிகளின் மெய்யுணர்வில் ஞான வடிவாய், ஞான பண்டிதனாகிய முருகன் கலந்து நிற்கிறான். உலக பந்த பாசங்களிற் கலந்து நிற்கின்ற ஆன்மா ஞானத்தை அடைய முடியாது. இந்தக் கலப்பு அற்ற அருள் நிலையைப் பெறுதல் வேண்டும்.

இறைவனுடைய திருவடியை இறுகப் பற்றுதலே பிறவி நோய் நீங்குவதற்கான வழி ஆகும். ஒருவருக்கு வாழ்க்கையில் ஏற்படும் வறுமைத் துன்பமானது அவருடைய வாழ்வை அடியோடு கெடுத்து விடும். வறுமைகள் நீங்கவும், ஞானத்தைப் பெறவும் ஞான பண்டிதனாகிய முருகனின் துணையை ஒவ்வொருவரும் பெற வேண்டும்.

கண்ணொளி கதிரொளியிற் கலப்பது போல ஞானிகளின் அறிவும் முருகனுடைய அருள் ஞானமும் அத்துவித நிலையில் ஒன்றாகி விடுகின்றன. ''தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்'' என்ற நிலையிற் சீவபோதம் நீங்கிச் சிவபோதம் என்ற நிலையில் அடங்கி, அந்த அருட்காட்சியில் நின்று, பதிஞானத்தால் அனைத்

தையும் உணர்கின்ற அடியார்களின் உள்ளுணர்வில் முருகப்பெருமான் கலந்திருந்து வழிகாட்டுகிறார். சிவஞானிகளது அறிவில் கலந்து நிற்கும் வேலவனே, எனக்கும் அந்நிலையை அருள்வாயாக என முருகப் பெருமானிடம் அருணகிரியார் வேண்டி நிற்பதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

அறிவொன்றற நின்றறிவார் அறிவில்
பிறிவொன்றற நின்ற பிரான் அலையோ
செறிவொன்றறவந் திருளே சிதைய
வெறிவென்றவரோடுறும் வேலவனே.

(தொடரும்...

மனிதராகிய எமக்கு இறைவன் ஆறறிவைத் தந்துள்ளான். ஆகையால் எமக்கு நல்லது எது? பொல்லாதது எது? என்று பகுத்தறியும் அறிவு இருக்கிறது. நாம் நமக்குள்ள பகுத்தறிவைப் பயன்படுத்தி நன்மை தீமைகளை அறிந்து கொள்ள வேண்டும். இறைவன் சாட்சியாகத்தான் இருந்து எம்மைக்கவனிக்கின்றார். இறைவனுக்குப் பல பொறுப்புக்கள் உண்டு. நாம் தீய செயல்களைச் செய்தால் தண்டிப்பதும், நல்ல செயல்களைச் செய்தால் நன்மைகளை அளிப்பதும் அவருடைய செயல். மிருகங்களுக்கு இறைவன் ஐந்தறிவைக் கொடுத்து அவற்றிலிருந்து மேம்பட்டவனாக வாழ்வதற்கு எமக்கு ஆறறிவை அளித்துள்ளான். மிருகங்களுக்கு பசி, தாகம், காமம் போன்ற அடிப்படை உணர்ச்சிகள் தாம் உண்டு. நாம் அப்படிப் பட்டவர்கள் அல்ல. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் சக்தியை இறைவன் நமக்கு அளித்துள்ளார். அதனால் நாம் செய்வது ஒவ்வொன்றையும் அவர் சாட்சியாக இருந்து, நமக்குள்ளேயே இருந்து கவனிக்கின்றார் என்பதை உணர்ந்து நாம் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். அப்படி நாம் நடக்கும் பொழுது இறைவன் எமக்கு அளித்த ஆறறிவின் பயன் தெரியும்.

உ

# சிந்திப்போம்! செயற்படுவோம்!

★ க. மாணிக்கவாசகம் ★

மனிதப் பிறவி பெறற்கரியது; மாண்பு மிக்கது என்பது மறுக்க முடியாத உண்மை. மனிதன் பகுத்தறிவுள்ளவன்; சிந்தித்துச் செயலாற்றுபவன். ஆகவே நாங்கள் ஒவ்வொருவரும் இந்தப் பிறவியின் முழுப்பயனையும் அடைவது எப்படி என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாது.

'நான்' என்னும் இவ்வுருவம் தசை, மனம் ஆகியவற்றின் சேர்க்கையே, இரத்தம் தசை, எலும்பு மூன்றும் சேர்ந்ததே உடல். பிராணன் வெறுங்காற்று. அது மாறி மாறி உட்சென்று வெளியே வருகின்றது. எந்நேரமும் இவை அற்றுப் போகலாம். இவ்வுருவத்தின் ஆயுட் காலம் மிகக்குறுகியது இக்கால எல்லைக்குள் நாம் செய்து முடிக்க வேண்டிய அலுவல்கள் அநேகமுண்டு. நிறை வேற்ற வேண்டிய கடமைகள் பல உண்டு. நமக்கு இவ்வுருவத்தையும் உறுப்புக்களையும் கொடுத்தவன் இறைவன். ''வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்தவன்'' அவனே. ஆகவே சதா காலமும் அவனை நினைந்து, அவன் திருநாமங்களை உச்சரித்து, அவனை வணங்க வேண்டியது முக்கியம். ஞானவெளிச்சத்தை ஞானச்சுடரை, உள்ளே செலுத்தி, நம்புத்தியை மூடியிருக்கும் அறியாமையாகிய இருளை நீக்கி விடுவது அவசியம் எந்த நேரத்தில் உயிர் நீங்கினாலும், எமது எண்ணமும், பேச்சும், செயலும் நல்லனவாக அமைய வேண்டும். விதியால் வந்த சுகமும், விலக்க முடியாத துக்கமும் ஏற்படும் தருணங்களில் அவை இரண்டும் இறைவனால் தரப்பட்ட வரப்பிரசாதமெனச், சமமாகப்பாவித்து, அன்புடன் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். அதை விட்டு சுகம் வரும் பொழுது மட்டற்ற மகிழ்ச்சியடைவதும், துக்கம் வரும் போது இறை நிந்தனையில் ஈடுபடுவதும் மடமை. சுகதுக்கம் சுழல் சக்கரம்.

மண்ணிற் பிறந்த நமக்குப் பல கடமைகள் உண்டு. மரணத்தின் முன் நாம் அவற்றைச் செய்து முடிக்கவேண்டாமா? பத்து மாதமாக நம்மை வயிற்றிற் சுமந்து '' ஈன்று புறம்தடுத்தல் என்தலைக்

ஆசை அனைத்தையும் கொல்லும்.

கடனே '' என நினைத்து நடந்த எம் தாய்க்கு, பகலிரவாக விழித் திருந்து பாதுகாத்தவளுக்கு. நாம் கடமைப்பட்டுள்ளோம். நமக்கு முதன் முதலாகக் காட்சி தரும் உயிர் அவளே! தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை என்பார்கள். ஆகவே தாயைத் தெய்வமாக மதித்து நடக்க வேண்டியது எமது கடமை. தாய் மூலமாக நாம் தந்தையை அறிகின்றோம். '' அன்னையும் பிதாவும் முன்னறி தெய் வம் ''என்பது ஒளவையின் வாக்கு. நம்மைச் சான்றோனாக்குபவன் தந்தையே. ஆகவே அவரையுந் தெய்வமாக மதிக்க வேண்டும். மகன் ' தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் எனுஞ்சொல்'' ஆகவே நமது செயல்கள் மூலம் மற்றவர்கள் நம்மைப் போற்றக் கூடியதாக நடக்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் அடுத்து வருவது குரு. குரு இல்லாது ஒரு வித்தை யும் கை கூடாது. எழுத்தறிவித்தவன் இறைவன் - ஆவான். ஆகவே அவரையும் நாம் தெய்வமாக மதிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பராசக்தியின் ஒரு பொறி. உலகம் உயிர் என்றால் நாம் அவற்றின் உறுப்புக்கள் எல்லா உறுப்புக்களும் சரி வர இயங்கினால் மட்டுமே உலகம் சரிவர இயங்க முடியும். ஆகவே உலகிற்குச் செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன இவைகளை நாம் சரி வரச் செய்தோமேயாயின் மனிதருள் மாணிக்கமாகத்திகழ லாம். எம் வாழ்வு ஞான வாழ்வாகும். இச்செயல்களை நாங்கள் செய்யும் பொழுது நீதி, சத்தியம், தெளிவான புத்தி, அன்பு, தைரி யம், நடு நிலைமை இவற்றைக்கைக்கொள்ளல் வேண்டும் மக்களின் பாராட்டுக்களை எதிர்பார்த்தோ அல்லது அச்சங்காரணமாகவோ, நீதியிலிருந்து அணுவளவும் நாம் பிறழக்கூடாது. நமது பேச்சுக்களி லும், செயல்களிலும் கூடிய பங்கு யாருக்கும் வேண்டாதவை. அவற்றை நீக்கினால் மனக்கசப்பும் கவலையும் நீங்கும். காலமும் வீணாகாது. தீய எண்ணங்களையொழித்தால், தீய செயல்களும் தானாகவே ஒழியும். எப்பொருள் மீதும் அளவற்ற ஆசையைத் தவிர்க்க வேண்டும். ஆசையே துன்பத்தைக்கொண்டு வரும். '' மற் றுப் பற்றின்றி நின் திருப்பாதமே மனம் பாலித்தேன் '' எனப்பாடி தெய்வ சிந்தனையில் ஊறிக்கொள்வோம். உலகத்தில் எதுவும் நிலை யற்றது. ''காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே'' '' ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல '' ஆகவே ஞான அறிவுள்ள வன் ஆய்ந்து பார்க்க வேண்டியது எவ்விதம் தெய்வத்தை அணுக லாம் என்பதே. தெய்வம்! தெய்வம்! என்று கத்துகிறாயே! தெய் வத்தைக் கண்டதுண்டா? என அறிவிலி கேட்பான். உயிர், உயிர் என்று குழறி உயிருக்கு வேண்டிய சகல பாதுகாப்புக்களுஞ் செய்து. எல்லாச் சௌகரியங்களும் வழங்குகின்றோமே. யாரும் உயிரைக்

கண்டதுண்டா? தெய்வத்தை நாம் செயல் மூலம் உணரலாம். கண்ணாற் காண்பது அரிது. அவன் "விறகில் தீயினன், பாலிற்படுநெய் போல், மறைய நின்றுளன், மாமணிச் சோதியான்" ஆகவே அவனை மனத்தில் தியானித்து,

"உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன் – பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே"

என்ற தெய்வ சிந்தனையுடன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

---

## ஆற்றங்கரை அப்பனுக்கு ஓர் பாமாலை

ஆற்றங்கரை அப்பனைப் பாடுங்கடி - நம்
அல்லல்கள் எல்லாம் பறந்தோடுமடி
சந்நிதி யானைப் பாடுங்கடி - நம்
சஞ்சலங்கள் எல்லாம் தீருமடி
காவடி முருகனைப் பாடுங்கடி - நம்
கவலைகள் எல்லாம் பறந்தோடுமடி
அன்னதானக்கந்தனைப் பாடுங்கடி – நம்
அங்கங்களெல்லாம் குளிருமடி
சேவல்கொடியோனைப் பாடுங்கடி – நம்
தேசமெல்லாம் ஒற்றுமையாகுமடி
நீலமயிலோனைப்பாடுங்கடி - நம்
மாந்தரெல்லாம் தழைப்பாரடி
வேதாந்த முருகனைப் பாடுங்கடி - நம்
வேலும் மயிலும் துணையுண்டடி
பந்தவினைகளைப் போக்கிடுவானடி – நம்
பாலச்சந்நிதி முருகனடி
பால்க்காவடி விரும்பும் முருகனடி - நம்
பார்போற்றும் பாலமுருகனடி
பாடுங்கடி பாமாலை பாடுங்கடி - நம்
செல்வச் சந்நிதி முருகனைப்பாடுங்கடி
சந்நிதியானே சரணம்

☐ ஐ. தனலெட்சுமி ☐

உண்ணும் போது மௌனமாயிருக்கப் பழகு.

[ தொடர்ச்சி... ..

உ

# 21-ஆம் நூற்றாண்டில் ஈழத்து இந்து சமயத்தவரிடையே ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய

# சிந்தனைக் கருத்துக்கள்

> ஆறு. திருமுருகன் <

ஈழநாட்டில் அன்னியராட்சியினால் 1505 ம் ஆண்டிலிருந்துஇந்து சமயத்திற்கு கலாச்சாரத் தாக்கங்கள் இருந்து வந்தது. மத சுதந்திரம் பறிக்கப்பட்ட காலத்திற்கூட மதம் மாறாது வாழ்ந்த பெருந்தொகையான இந்துக்கள் இந்துப்பாரம் பரியங்களை காப்பாற்றி வந்தனர். எனினும் இந்துமத மறுமலர்ச்சிக்கு அன்னியராட்சி இடையூறாகவே இருந்தது 1870களில் நல்லை நகர் நாவலர் பெருமான் இந்துக்களிடையே சீர்திருத்தச் சிந்தனைகளை வெளிப்படுத்தி மக்களைச் சீர்திருத்த முயன்றார். குறிப்பாக சைவ ஆலயங்களில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக அவர் எடுத்த முயற்சிகள் பெரிதும் வெற்றியளித்தன.

1. ஆலயங்களில் உயிர்ப்பலியிடல் ( வேள்வி ) நாவலரது முயற்சியினால் தடை செய்யப்பட்டது.
2. ஆலயங்களில் நடாத்தப்பட்ட கேளிக்கை நிகழ்ச்சிகளில் ஒன்றான சதுர்க்கச்சேரி தடுக்கப்பட்டது.
3. ஆலயங்களில் அமைதிக்கு இடையூறாக பெரும்தொகைப் பணத்தில் அநியாயமாக செலவு செய்யப்பட்ட வாணவேடிக்கை நிகழ்ச்சி தடுக்கப்பட்டது
4. கிராமிய வழிபாட்டில் மது, மாமிசம் உண்டு வெறியாட்டம் ஆடுகின்ற முறையற்ற வழிபாடு தடுக்கப்பட்டது.
5. ஆலயங்களில் சைவ சமய உண்மைகளை எடுத்துரைக்கும் பிரசங்க மரபினை ஏற்படுத்தல்.
6. ஆலயம் தோறும் அறநெறிவாழ்வைக் கூறுகின்ற புராணப் படிப்பு மரபை முதன்மைப்படுத்தல்.
7. ஆலயச் சூழலில் கல்விச்சாலைகளை உருவாக்கல்.

8. ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெற வேண்டுமென பிரசாரம் செய்தல்.

9. ஆலயங்களில் பூசகராக பணியாற்றுகின்றவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாகவும் ஆசார சீலர்களாகவும் சைவ ஆகமங்கள் புராணங்களை கற்க வேண்டும் என பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்தமை.

10. ஆலயங்களைப் பராமரிப்பவர்கள் தீட்சை பெற்றவர்களாகவும் பாவங்களை வெறுத்துப் புண்ணியம் செய்பவர்களாகவும் சமூகத்திற்கு முன்னுதாரணமாகவும் இருத்தல் வேண்டும் என பிரசாரம் செய்தமை.

மேற்குறித்த நாவலரின் சீர்திருத்தச் சிந்தனைகள் ஈழத்து இந்து மத மறுமலர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். அவரது சீர்திருத்தக் கருத்துக்கள் பல ஈழத்தவர்களால் பின்பற்றப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டில் பாரத தேசத்தில் பல சீர்திருத்த வாதிகள் இந்து சமயத்தவரை நெறிப்படுத்த முனைந்த போதிலும் பெருவெற்றியைச் சந்திக்க முடியாதநிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இந்தியச் சனத்தொகையில் 85% ஆனவர்கள் இந்துக்களாக விளங்குகின்ற போதிலும் ஒன்றுபட்ட ஓர் உணர்வு கட்டியெழுப்பப்படாமை வேதனைக்குரியதே.

தென்னாட்டில் தோன்றிய ஆதீனங்கள் இந்துக்களிடையே சில சீர்திருத்தச் சிந்தனைகளை உருவாக்கி செயற்படுத்தின எனினும் இந்துக்களை ஒன்று திரட்டுகின்ற முயற்சியை அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. ஆதீனங்களுக்கிடையே பல சம்பிரதாய வேறுபாடுகளை இன்றும் வளர்த்துக் கொண்டுள்ளார்கள். குன்றக்குடி அடிகளாரால் உருவாக்கப்பட்ட ஆதீனம் சில நவீன சீர்திருத்தங்களை முன்வைத்துச் செய்யப்பட்டது. சாதிப்பாகுபாடு, பழமையிற்புதுமை காணல் போன்ற விடயங்களில் புதிய சிந்தனையை வெளிப்படுத்தியவர் குன்றக்குடி அடிகளார் சமுதாயப்பணிக்கு கிரியைகளை விட முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் என துணிந்து கருத்தைக் கூறியவர். அவரின் சீர்திருத்தப் பணிகள் சில

1. கண்ணப்பநாயனார் குரு பூசைத்தினத்தில் பார்வை குறைந்த ஏழைகளுக்கு கண் சத்திரசிகிச்சை. மூக்குக் கண்ணாடி வழங்கல்.

2. காரைக்கால் அம்மையார் குருபூசை தினத்தில் ஏழை விதவைப் பெண்களுக்கு உடுபுடவை வழங்கல்.

3. பெண்கல்விக்கு, தொழிற்கல்விக்கு ஆதீனம் மூலம் உதவுதல்.

மேற்குறித்த புரட்சிகரமான செயற்பாடுகளை இந்துச் சீர் திருத்த நிலையில் குன்றக்குடி அடிகளார் செயற்படுத்தினார்.

இன்று பாரத நாட்டில் சில இந்து நிறுவனங்கள் நவீன சீர் திருத்தப்பணிகளை ஆற்றி வருகின்றன. இராமகிருஷ்ண மிசன், பெங்களூர் ஸ்ரீ கைலாய ஆச்சிரமம், சிவானந்த தபோதனம் போன்றவை புதிய செயற்றிட்டங்களை உருவாக்கி இந்துக்களிடையே நவீன மறுமலர்ச்சியை ஏற்படுத்த உழைத்து வருகின்றன. இந்துக் களின் அவதாரக் கொள்கைகளை, தன்னகத்தே கொண்டு சர்வமத இணைப்பகமாக செயற்படுகின்ற சத்திய சாயிபாபாவின் சிந்தனை கள், செயற்பாடுகள், புதிய சீர்திருத்தங்களை இந்தியாவில் ஏற்படுத் தியிருப்பது உண்மை. வைத்தியசாலைகள், உயர்கல்விக் கூடங்கள், தொழிற்கல்விச் சாலைகள், பொதுச்சேவைகள் என இந்துக்களி டையே ஓர் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஈழ நாட்டில் இன்று இந்துக்களிடையே ஏற்பட வேண்டிய சில சீர்திருத்தங்கள்.

## 1. சமூக வாழ்வு

### 1. 1. பிறந்த நாள் விழா

சைவசமயத்தவரிடையே குழந்தைகளின் பிறந்தநாள் விழாவை சைவநெறிக்கு மாறாக கொண்டாடுவதில் மாற்றம் ஏற்பட வேண் டும். இந்துக்கள் வினையின் காரணமாக பிறவி ஏற்படுகின்றது என்ற கொள்கையை பிரதானமாகக் கொள்கின்றவர்கள். பிறந்த மாதத்தை பகை மாதமாகக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள் எனவே தான் பிறந்தநாளை வழிபாட்டுக்குரிய நாளாகவும் தர்மகாரியங்களை பிறந்த நாளுக்குரியவர் பெயரில் செய்யும் நாளாகவும் முன்னோர் செய்து வந்தனர். இன்று இந்துக்களின் பாரம்பரியக் கலாச்சாரத் திற்கு மாறாக பெரும்பாலானோர் வேடிக்கையாகக் கொண்டாடுவது தவறாகும். இவ்விழாக்களில் பிரதானமாக மேலை நாட்டுத் தீன் பண்டங்களை ( கேக் ) செய்து அதிலுள்ள விளக்குகளை அணைத்து விழாவைத் தொடங்கும் மரபு தற்போது வளர்ந்து வருகிறது விளக் கேற்றி விழாச்செய்யும் இந்துப் பண்பாட்டை இந்துக்கள் தொடர வேண்டும் பிறரின் கலாச்சாரங்களை வலியச்சேர்ப்பது எம் பாரம் பரியத்திற்கு அழிவையே ஏற்படுத்தும் ஒவ்வொரு இந்துக்களும் இவ் விடயத்தில் இன்று அக்கறை கொள்ள வேண்டும். பிறந்தநாளில் இயலாதவர்க்கு பிள்ளைகளின் பெயரால் உதவுவது, ஆதரவற்ற இல் லங்களில் வாழும் பிள்ளைகளுக்கு உணவளிப்பது போன்ற சீர்திருத் தங்கள் எம்மவரிடையே விரைவில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

[வளரும் .....



உ

# மாசிமகம்

() க. சிவசங்கரநாதன் ()

சைவசமயம் பக்தி நெறிக்கு மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. பக்திநெறிக்கு. எமது பழைய வினைகளையெல்லாம் மாறச் செய்யும் வலிமை உண்டு என மணிவாசகப் பெருமான் கூறியிருக்கிறார். புதிய வினைகள் எம்மை அணுகவிடாது தடுக்கும் ஆற்றலும் பக்திநெறிக்கு உண்டு. எனவே பக்தி நெறியினைக் கடைப்பிடித்தற்காகத் தியானம், பிரார்த்தனை, வழிபாடு, விரதம் போன்றவைகைதனை இயன்றளவு பின்பற்ற வேண்டும் இதற்கெனப் பன்னிரு மாதமும் குறித்த சில நாட்களில் விரதம் அனுட்டிக்க விரதங்களும் விழாக்களும் அமைகின்றன. இதில் மாசி மாதத்தில் இரண்டு விசேட விரத தினங்கள் வருகின்றன ஒன்று முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை நோக்கி அனுட்டிக்கின்ற மகாசிவராத்திரி, மற்றையது சிவத்தின் கூறாகிய சக்தியை நோக்கி மேற்கொள்ளப் படுகின்ற மாசிமகம். மகம் என்பது இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்று. மாதந்தோறும் வருகின்ற மகநட்சத்திரத்தோடு கூடியநாள் இறைவழிபாட்டிற்குச் சிறந்தநாள் ஆகும். எனினும் மாசிமாதத்து மகம் பொருந்திய நன்னாள் மிகவும் புனிதம் நிறைந்த புண்ணிய நாள் என நூல்கள் குறிப்பிட்டுள்ளன.

மாசிமாதத்து மக நட்சத்திரத்தில் தக்கன் என்பவனின் மகள் தாட்சாயணி பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தக்கன் தனது மகளாகச் சிவபெருமானின் சக்தியாகிய உமாதேவியார் வந்து பிறக்க வேண்டும் என்று வேண்டிப் பெருந்தவம் இயற்றினான் தக்கன் பிரமனின் புத்திரர்களில் ஒருவன் என்றும் பிரமனின் கட்டை விரலில் பிறந்தவன் என்றும் கூறுவர். தக்கன் செய்த தவத்தைக் கண்ட சிவபெருமான் அவன்முன் தோன்றிய பொழுது தான் உமாதேவியாரை மகளாகப் பெறவும் சிவபிரானை மருமகனாக அடையவும் வரம் வேண்டினான் வேண்டுவார் வேண்டியவற்றை ஈபவன் ஈசன் அதனால் தக்கன் கேட்டவரத்தை மறுக்காமல் ஈசன் வழங்கி

யருளினார் உமாதேவியாரும் வந்து தக்கனுக்கு மகளாகப் பிறந்தார். தெய்வக்குழந்தைக்குத் தாட்சாயணி எனத்தக்கன் பெயரிட்டு அன்போடு வளர்த்துச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்வித்தனன் தாட்சாயணி மாசிமகத்தன்று திருவவதாரம் செய்தமையினால் தேவியின் பிறந்த தினமாக அப்புனிதநாள் மகத்துவம் பெறுகின்றது.

பிறப்பு இறப்பு இல்லாத சிவசக்திக்குப், பிறப்பு இறப்புக்களுக்குட்பட்ட மனிதர்களுக்குப் போன்று பிறந்ததினம் பூப்புநீராட்டுதல் திருமணம் போன்றவற்றை நிகழ்த்திப் பார்ப்பதிற்பக்தர்கட்கு ஆசை உண்டு அவற்றை நிறைவேற்றித் தெய்வீகக் காட்சிகளைக் கண்குளிரக்கண்டு பரவசத்தில் திளைப்பதில் அடியார்கள் ஓர் அற்புத அனுபவத்தையும் ஆன்ம திருப்தியையும் பெற்றுக்கொள்கிறார்கள். இவை வாழ்விற்கு வளமும் ஒளியும் தருவதோடு வெவ்வினைகளை அறுப்பதற்கும் அவர்களுக்கு உதவுகின்றன என்ற நம்பிக்கை காலம் காலமாகச் சைவமக்களிடையே இருந்து வருகிறது. விரதங்களும் விழாக்களும் இணைந்தே காணப்படுகின்றன. மாசிமகம் தேவியின் விழாவாகவும் தேவியை நோக்கிய விரதமாகவும் அனுட்டிக்கப்படுகிறது. அம்பாள் கோயில்களில் மாசிமகத்தன்று விசேட பூசைகள் விழாக்கள் திருஉலாக்கள் திருஊஞ்சல் என்பன நிகழ்த்தப்படுகின்றன. தெல்லிப்பழைத் துர்க்காதேவி ஆலயத்தில் பத்து நாட்கள் தேவிக்கு இலாட்சார்ச்சனை நடைபெற்று மாசிமகத்தன்று நிறைவுவிழா மிக விமரிசையாக எடுக்கப்படுகிறது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தில் மாசிமாதத்தில் கொடியேற்றத்திருவிழா நடைபெற்று, மாசிமகத்தன்று பஞ்சரதபவனி நடைபெறுகின்றது. ஐந்துதேர்கள் பவனிவரும் தெய்வீகக் காட்சி அம்பாள் அடியார்களுக்கு அற்புதமான, கண்கொள்ளாக்காட்சியாக அமைகின்றது.

தென்னிந்தியாவில் கும்பகோணத்தில் மாசிமக உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசிமகம் வருகின்றது. அதாவது பூரணையும் இணைந்து வரும் போது சிறப்பு, அப்புண்ணிய நன்னாளில் கும்பகோணத்தில் புனித நதியில் தீர்த்தமாடித்தங்கள் பழைய வினைகளைப் போக்கி உய்தி பெற்றுக்கொள்வதற்காகப் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் எதிர் பார்த்திருப்பர். வடஇந்தியாவில் கும்பமேளா என்னும் விழா வெகு சிறப்பாக இக்காலப்பகுதியிற் கொண்டாடப்படுகிறது. கும்பமாதம் என்பது மாசிமாதம் எனவே கும்பமேளா என்றால் மாசிமாதத்தில் நடைபெறுகின்ற விழா எனப்பொருள்படும் இது மிகக்குதூகலமாகக் கொண்டாடப்படும் கங்கையில் தீர்த்தமாடிப் பாவங்களைப் போக்

குவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் மகிமைகளைப்பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. திருக்கோயில்கள் அமைந்துள்ள தலவிசேடம், பிரதிட்டை செய்யப்பட்டுள்ள மூர்த்தியின் விசேடம், அங்கு காணப்படுகின்ற தீர்த்த விசேடம் என்பன குறித்துப் பெருமையும் சிறப்பும் பெறுகின்றன. தீர்த்த விசேடம் பெற்றுள்ள திருத்தலங்கள் பல உள்ளன அங்குள்ள நதி, ஆறு, குளம், கிணறு, கடல் ஆகியவற்றின் தீர்த்த விசேடம் இத்தலங்களுக்குத் தனிச்சிறப்பைத் தருகின்றன. இன்ன இன்ன புண்ணிய காலங்களில் அல்லது தினங்களில் இத்தீர்த்தங்களில் நீராடினால், தர்ப்பணம் செய்தால், இகபரங்கள் கிட்டும் என்று பல நூல்கள் குறிப்பிட்டுள்ளன.

அந்த வகையில் மாசி மகமும் தீர்த்தத்தோடு தொடர்புள்ள புனித நாளாகக் கொள்ளப்படுகிறது. கும்பகோணம் மாசிமகத்தீர்த்தத்திற்கு விசேடம் பெற்றுள்ள திருத்தலம் ஆகச் சொல்லப்படுகிறது. கங்கை, கோதாவரி, நர்மதை, சிந்து, சரஸ்வதி, மதுரா, மாயா, அவந்தி, கோடி தீர்த்தம், பஞ்சநதம், யமுனை, பாபநாசம், சேது போன்ற தீர்த்தங்களும் மகிமை பெற்றவை. இத்தீர்த்தங்களில் மாசி மகத்தன்று மனம், வாக்கு, காயங்களினால் ஸ்மரித்தாலும் பல்வேறு பலன்களையும் பெறுவர். தீர்த்தக்கரையில் மூன்று தினங்கள் உபவாசம் இருந்து சங்கற்பஞ்செய்து முழுகிவிட்டுக்காயத்திரி முதலான மந்திரங்களை உச்சாடனம் செய்து காஞ்சனம், பசு முதலியவற்றைத் தானங்களாக வழங்கி, விரதம் காத்து, கடவுள் வழிபாடு செய்பவர்கள் எல்லாப்பெரும் பலன்களையும் அடைவார்கள். மாசிமகத்தில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களைத் தரிசிக்கினும், தொட்டும் மூழ்கினும் பரிசிக்கினும், வாயினாற்பருகி உருசிக்கினும் அவற்றின் கீர்த்தி புகழைப்பேசினும் பெரும் புண்ணியங்களை அடைவர். பழைய வினைகள் கரைந்து விடும் பக்தி மேலோங்கும். இத்தினத்தில் தீர்த்தக்கரைகளில் இறந்த உயிர்களுக்காக நற்கதி வேண்டிப்பிண்டதானம், தர்ப்பணம், பிதிர்க்கடன் அஸ்தியிடல் என்பவற்றை நிகழ்த்தினால் அவர்களின் பாவங்கள் நீங்கும் அதனால் அவர்கள் நற்கதியடைவர் இவ்வாறு மாசிமகத்தில் புனித தீர்த்தமாடுதலின் பலனாக இம்மை வாழ்வும் மறுமை வாழ்வும் சுகம் பெறுகின்றன.

மாசி மகத்தில் தீர்த்தம் ஆடல் எவ்விதம் சிறப்புப்பெறுகிறது என்பதற்குப் புராண வரலாறு ஒன்றும் கூறப்பட்டுள்ளது என்பதும் அறியக் கூடியதாகவுள்ளது. இறைவனுக்கும் இறைவிக்கும் உவப்பான மாசிமகப் புண்ணிய தினத்திற் புனித நீராடி, வழிபாடு செய்து விரதம் அனுட்டித்து இயன்ற தான தருமங்களைச்செய்து, ஒழுக்கம் பேணி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுதல் செய்வோமாக!

---

பெருமனம் உள்ளவருக்கு உலகமே குடும்பம்.

(தொடர்ச்சி...

# ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன்
# திருத்தல புராணம்

★ சி. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள் ★

பண்பான கதிர்காமர் பரிந்து வெம்பிப்
பாலூட்டும் தாயன்பு பரவிக் கூட்டிக்
கண்பாயும் நீரரும்பக் கரங்கள் கூப்பிக்
கசிந்துருகிக் கங்குல்பகல் கருத்த மைந்து
விண்பாலி னமரரினம் விழைந்து போற்றும்
வேல்முருகா வாவென்று விரும்பிக் கூவத்
தண்பாதச் சிலம்பதிரத் தனிவேல் தாங்கிச்
சற்குருவாய் வந்துமொழி சாற்று வானே. 76

வேலொன்றைக் கதிர்காமர் கைக்கொ டுத்து
''விளங்குமலர்ப் பூவரச விருட்சத் தின்கீழ்
கோலமிக வாங்கிதனைக் குறிப்பி னாட்டிக்
குணமௌன விதிப்பூசை கொள்க'' வென்றான்
மாலுடைய புதல்வியர்கள் மருவத் தொண்டை
மானாற்றில் கதிர்காம மைந்த னோடு
சீலமிகத் திரும்பிவந்தித் திருத்த லப்பேர்
ஸ்ரீ செல்வச் சந்நிதியென் றுரைத்த மர்ந்தான். 77

நேராகக் காட்சிதந்து நெடுவேல் தந்து
நிகழ்த்துகிற பூசைசெயும் நினைவு தந்து
தாராள மனம்தந்து சந்த திக்குத்
தளராத சுகம்தந்து சரணம் தந்து
தீராத வினைதீர்க்கச் சித்தங் கொண்ட
சீரானை மயிலானைச் செந்தி லானைப்
போரானை வேல்நாட்டிப் பொலிநீ ராட்டிப்
புகழ்ந்துகதிர் காமர்நனி பூசித் தாரே. 78

சரவணபவ வானந்த சத்தி பாலா
சதாசிவசங் கரமைந்த தந்தி ரூபப்
பிரணவனின் சோதரவேல் பிறங்கு செல்வ,
பேராதா ரத்தலைவ பெருகு வேதக்
கருணைமுக முருககுக கார்த்தி கேய,
கடம்பகுரு பரகுமர கந்தா வென்று
திருவருளால் ஓங்கார தியானம் கொண்டு
சித்தமெழு மந்திரத்தால் சேவித் தாரே. 79

துன்பத்தை நீக்கிவிட்டு இன்பத்தை அடையமுடியாது

76] இவ்விதமாகக் கதிர்காமர், பிள்ளையைக் காணாத தாயைப்போல உள்ளம் பதறி கண்பெருகக் கை கூப்பி, "தேவர்கள் தினமும் வந்து பூசிக்கின்ற பரம் பொருளே எனக்கு முன்னே வா வா'' என்று வேண்டி நிற்க, தந்தனம் தந்தனம் என்று பாதச் சிலம்பொலிக்க; எம்பெருமான் காட்சிதந்து, சில திருவார்த்தைகள் கூறுவாராயினார்.

77] ஒரு வேலாயுதத்தைக் கதிர்காமரின் கையில் கொடுத்து இந்த வேலை, இங்கு நிற்கும் பூவரசமரநிழலில் யான் திருவடிபதித்த இடத்தில் பிரதிட்டை செய்து யான் கூறியபடி ஆறெழுத்தை நெஞ்சமுழுத்தி மௌன பூசை செய்வாயாக; என்று கூறிமறைந்தார். பின் கதிர்காமர் அந்த முறைப்படி பூசை செய்யும்வேளை; ஒருநாள் எம்பெருமான், வள்ளி தெய்வயானை சமேதராகக் காட்சிகாட்டி, கதிர்காமரே இத்தலத்தின் பெயர் 'செல்வச்சந்நிதி' என்று கூறி அருள்புரிந்து கணப்பொழுதில் மறைந்து திருவிளையாடல் செய்தார்.

## கதிர்காமரின் பூசை

78] மூவரும் தேவரும், யாவரும் தேடிக்காணாத திருவடிவை என்கண்ணுக்குப் புலப்படுமாறு காட்சிதந்து - வேல்தந்து அதனைப் பூசிக்கும் முறையுரைத்து, எனக்குச் சாந்திநிலை தந்து - சந்ததிதனராத வாழ்வுதந்து, தீராத வினை தீர்க்கத் திருவுளங் கொண்டவராகிய முருகனை, மயில் வாகனனை, செந்திலிலிருந்து வந்தவனை நினைந்து நாட்டிய வேலுக்கு அபிஷேகம் செய்து பூசித்து வந்தார்.

79] சரவணபவானந்தா, சக்தி உமையின் பாலா, சதா சிவனின் மகனே, ஆனைமுக விநாயகனின் தம்பியே, வேல்பிடித்த செல்வனே, ஆறு ஆதாரங்களுக்கும் தலைவனே, வேதம் துதிக்கும் கருணையழகனே, முருகா, குகா, கார்த்திகேயா, கடம்பா, குருபரா, குமரா, கந்தா என்று எம்பெருமான் திருவருளால் அவரது நாமங்களை நினைந்து ஓங்கார தியானம் செய்து சடாட்சர மந்திரமுணர்ந்து பூசைசெய்தார்.

00

ஊழ் நல்லவருக்கு வழிகாட்டுகிறது.

உ

# சைவத்திருமுறைகள்

ஆய்வாளர் கனக. நாகேஸ்வரன் M. A.

இன்று குறிப்பாக, தமிழ்நாட்டிலுள்ள சைவ ஆதீனங்களும், இசைத்துறைகளையுடைய பல்கலைக்கழகங்களும், யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறையினுள் அமைந்துள்ள தமிழினத்துறை (பண்ணிசைத்துறை) யும் தேவாரம் திருமுறைகளைத் தத்தமது பாடத்திட்டங்களிலே இணைத்துப் பட்டதாரி மாணவர்களுக்குப் போதித்து வருவது — சைவத்திருமுறை பேணும் வகையிலே தொழிற்படுவது - போற்றத்தக்கதே. எனினும் சமூகந் தழுவியவகையிலே திருமுறைப்பண்ணிசையை இன்று யாழ். கல்வித் திணைக்களத்திலே இயங்கிவரும் வடஇலங்கைச் சங்கீத சபை (N. C. O. M. S.) இலங்கையிலே - நாடுதழுவிய ரீதியிலே - பண்ணிசைப் பரீட்சைகளை நடாத்திவருவது சற்று மகிழ்வைத் தருவதாகும். இங்கு இச்சந்தர்ப்பத்திலே பிரதானமானதொரு கருத்தினை முன்வைக்க வேண்டியது நமது கடமையாகிறது. அதாவது திருமுறைப் பண் அமைந்துள்ள பாடல்களைப் "பிஞ்சு உள்ளங்களிலே மனனம் பண்ணச் செய்யும்" தேவை அத்தியாவசியமாகியுள்ளது. இது 'கல்வி நோக்கிலே' ஏற்பாடு செய்து ஊக்குவிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைச் செய்வதும் செய்விப்பதும் "சைவத்தமிழ் மக்களாகவே" அமைய வேண்டும். ஏனெனில் "பண்ணிசைமரபு" சைவவாழ்வியல் மரபோடு பின்னிப் பிணைந்தது. ஆகையினாலே பிறமதத்தினரோ, நாயன்மாரை நிந்திக்கும் குணங்கொண்ட கல்விமானகளோ, பிறஅதிகாரிகளோ இப்பணியிலே ஈடுபட அருகதையற்றோராவர். ஆர்வமிருப்பதுவேறு; அருகதையிருப்பது வேறு - நன்கு -சிந்தித்துணர வேண்டிய விஷயமிது; தெளிவுள்ளோர் உலகுக்கு உணர்த்தித் தமது பெரும்பணியை முன்னெடுப்பதாகுக!

**இனி, பகலிற்பாடும் பண்களை நோக்குவோம்.**

| | பண் | | இராகம் |
|---|---|---|---|
| 1. | புறநீர்மை | — | பூபாளம் |
| 2. | காந்தாரம் பியந்தைக் காந்தாரம் | } | நவரோசு |

அறிவு அச்சத்தை முறிக்கும் மருந்து.

| | | | |
|---|---|---|---|
| 3. | கௌஷிகம் | — | பைரவி |
| 4. | இந்தளம் திருக்குறுந்தொகை | } | மாயாமாலவடுகாளை |
| 5. | தக்கேசி | — | காம்போதி |
| 6. | நட்டராகம் சாதாரி | — | பந்துவராளி |
| 7. | நட்டபாடை | — | கம்பீரநாட்டை |
| 8. | பழம் பஞ்சுரம் | — | சங்கராபரணம் |
| 9. | காந்தரபஞ்சமம் | — | கேதாரகௌளை |
| 10. | பஞ்சமம் | — | ஆகிரி |

இப் பத்துப்பண்களும் பகலிற்பாடும் பண்களாகும்.

### இனி, இரவிற்பாடும் பண்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தக்கராகம் | — | காம்போதி |
| 2. | பழந்தக்கராகம் | — | சுத்தசாவேரி (ஆரபி) |
| 3. | சீகாமரம் | — | நாதநாமக்கிரியா |
| 4. | கொல்லி, கொல்லிக் கௌபாணம் திருநேரிசை | } | நவரோஸ் |
| 5. | வியாழக்குறிஞ்சி | — | சௌராப்புரம் |
| 6. | மேகராகக் குறிஞ்சி | — | நீலாம்பரி |
| 7. | குறிஞ்சி | — | அரிகாம்போதி |
| 8 | அந்தாளிக் குறிஞ்சி | — | காமா |

இந்த எட்டுப்பண்களும் இரவிற்பாடும் பண்களாகும்.

### பகலிலும், இரவிலும் பாடக்கூடிய பொதுப்பண்கள் மூன்று.

| | | | |
|---|---|---|---|
| 1. | செவ்வழி | — | யதுகுலகாம்போதி |
| 2. | செந்துருத்தி | — | மத்தியமாவதி |
| 3. | திருத்தாண்டகம் (குறிஞ்சி) | — | அரிகாம்போதி |

திருமுறைகள் நிலையாய செல்வத்தை எளிதாக அடைவதற்கு வழிகாட்டும் நூல்கள். அருளோடு கூடிய சிவபரம் பொருளே ''திரு'' ஆகும். அதாவது பெறத்தக்க செல்வம். மனக்கோணலை நீக்கி வாழ்க்கை முறையை ஒழுங்குபடுத்தும் நூலே இத்திருமுறைகள். இவற்றைப் பாடிவந்தவர்கள் ஓதுவார்கள். இவர்கள் திருமுறைகண்ட புராணம் கூறும் கட்டளை வேதங்களையும் ஐயந்திரிபறக் கற்றுப் பன்னிரண்டு திருமுறைகளையும் பண் நியதியோடு மரபு தவறாமல் பண்ணியல்பாகப் பக்தியுடன் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுகின்ற பண்ணிசை வல்லார்கள். புலமை நலத்துடன் பாடுவது

வேறு, பக்தியோடு குழைவோடு இறைவன் அருளை நாடி - வேண்டி இரந்து ஓதுவது வேறு; குழைவும் கனிவும் திருமுறையாளர்களை மேனிலைப்படுத்தும்

" இன்னிசையால் பாடவல்லார் இரு நிலத்தில் ஈசன் என்னும் இயல்பினாரே " என்றும், " சம்பந்தனது தமிழ் வல்லார் அடிபேணு தல் தவமே " என்று திருஞானசம்பந்தர் அருளியுள்ளார். இதிலிருந்து திருமுறையினை ஓதும்பாக்கியம் பெற்றவர்கள் சிறந்த " குரு" எனக் கொள்ளக் கூடியவர்கள் எனலாம்.

சைவர்கள் முதலிலே சிவதீட்சை பெற்றிருக்க வேண்டும். திருமுறைகளை ஓதும் தகுதி இருக்கிறது என்பதை அனைவரும் உண ருதல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் தம்மைச் சீராக்கிக் கொள்ள முடிவதுடன் ஒரு நல்ல பரம்பரையையும் ஏற்படுத்திக் கொள் வர். திருமுறைகளை ஓதுபவர்கள் தூய்மையராயிருத்தல் வேண்டும். அப்போதுதான் திருமுறைகளின் புனிதத்தன்மையை உணரக்கூடிய தாக இருக்கும். அதற்குக் கௌரவம் கொடுக்க முடியும். எக்காரி யத்தைச் செய்யும் போதும் நாம் உள்ளும் புறமும் தூய்மை உடைய வராய் இருத்தல் வேண்டும். நாம் சைவன் என்று சொல்வதற்கு முதற்கண் சிவதீட்சை பெற்றிருத்தல் வேண்டும் அல்லாதவர்கள் தம்மைச் சைவ சமயிகள் என்று கூறிக்கொள்ள அருகதையற்றவர் கள். தீட்சை ஒரு சத்தியம் போன்றது.

திருமுறைகளை இறைவனே அருளினார் என்ற திடநம்பிக்கை கொண்டவராகச் சைவசமயிகள் இருத்தல் வேண்டும். நம்பிக்கை இல்லாது போலித்தனமாக நடத்தல் திருமுறைகளை அவமதிப்ப தாகும். ஒன்றிய மனத்துடன் பொருள் உணர்ந்து பாடுதல் தனக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் உளநெகிழ்வையும், மனோரம்மியத் தையும் கொடுக்கவல்லது.

பாடல்களிலே பொதிந்துள்ள பக்திப்பெருக்கைத் தாமும் உணர்ந்து மெய்ப்பாடு வெளிக்கிளம்பக் கூடியதாக, மற்றவர் மனத்தை உருக்கிக் காட்டக்கூடியதாகப் பாடும் திறனை வளர்த்திருத்தல் வேண் டும். இங்கு ஒருவர் தனது வித்துவத்தைக் காட்ட என்று இல்லாமல் மற்றவர்பின் தொடர வேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடுதல் வேண்டும். பன்னிருதிருமுறைகளையும் குருமூலமாகப் பயின்று அவ ரது அங்கீகாரம் பெற்று அவரது ஆசியுடன் பாடுதல் குருபக்தியை யும் பணிவையும் ஒருவரிடத்திற்பரிணமிக்க வைக்கிறது [தொடரும்...

மகிழ்ச்சியும், அமைதியும் வாழ்வின் செல்வம்.

உ

# குரும்பைநகர் தந்த
# கரும்புமனிதன்

❖ கே. எஸ். சிவஞானராஜா ❖

மண்ணில் நல்ல வண்ணம் மாண்புடன் வாழமுடியும் என்பதனைத் தான் வாழ்ந்த சமுதாயத்தினூடாகவும், தான் தழுவிய தமிழர் விழுமியங்களினூடாகவும் நிரூபணமாக்கிய **ஒப்பற்ற மாமனிதரே கலைஞானி** அவர்கள். ஒரு தனிமனிதனாக நின்று தமிழின் தொன்மை கருதிய ஆய்வுகளையும், தேடல்களையும், எல்லாவற்றிற்கும் மேலாகச் சைவசமயத்தின் கருவூலங்களையும் தக்க சான்றுகள் மூலம் வெளிக்கொணர்ந்த **தமிழ்த்துறவியே, அமரர் அ. செல்வரத்தினம் அவர்கள்.**

உயர்ந்த மனிதன், சிவந்த மேனி, பனித்த சடை, கனிந்த உள்ளம், சிரித்த முகம், சீரிய பண்பு, சிந்தனைக்கோலம், செந்தமிழ்ப் பார்வை, சைவ சமயத்தின் குறியீடு, தொல்லியல் ஆர்வம், சேகரிக்கும் புராதன வங்கி ஆகிய அனைத்தும் சேர்ந்த பூரண மனிதனாக வாழ்ந்தவரே கலைஞானி எனப்போற்றி வணங்கப்படும் கரும்பு மனிதர் செல்வரத்தினம் அவர்கள். சுருங்கக்கூறின் அவர் ஒரு கலைப்பேடகம்.

தமிழர் வாழ்ந்த பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட புராதன நாணயங்கள், சுவடுகள், முத்திரைகள், மட்பாண்டங்கள், ஓலைச்சுவடிகள், சிற்பங்கள், சித்திரங்கள், வரலாற்றுஏடுகள், ஓடுகள், மூலிகைக் குறிப்புக்கள், நிகண்டு, வாகடம், செப்புக்கலசங்கள், புகைப்படங்கள், தமிழ் நூல்கள், சைவசமயச் சின்னங்கள், ஆதியாமனைத்தும் அவரிடம் விரும்பி அடைக்கலம் புகுந்தன. காரணம்; அவரது கரங்கள் இவற்றையெல்லாம் தமிழுக்காய், தமிழருக்காய், சைவத்திற்காய், சைவருக்காய், நமக்காய், நமது நாட்டிற்காய் அள்ளி அரவணைத்தன.

இடம் பெயர்வதற்கு முன்னதாக ஏழெட்டு லொறிகளில் ஏற்றக்கூடிய கலைப் பொக்கிஷங்கள் மலிந்து காணப்பட்டபோதும் பின்னதாகப் பற்பல கலைப் பொருட்கள் காப்பக ஆவணத்திற்குள் அகப்படவில்லை. இத்தகு நிலை ஏற்பட்டது யாவர்க்கும் துரதிஷ்டமேயாகும். இலண்டனைச்சேர்ந்த பிரபல கோடீஸ்வரர் ஒரு

வர், பல கோடிரூபா விலையில் இவற்றைப் பெற்றுக்கொள்ள முனைந்தபோது, கலைஞானி கூறிய வார்த்தை '' **இவை; யாவும் இந்த மண்ணுக்கே சொந்தமானவை. இவை தமிழரின் பூர்வீகச் சொத்துக்கள். இவற்றின் பெறுமதிக்கோ நிகரில்லை. அடுத்த சந்ததியோ இவற்றைக் காணுற்று வியக்கட்டும்! படிக்கட்டும்! உணரட்டும்! என்பதே.**

யார் உணர்ந்தோம்? ' மாமனிதர் ' எனப்போற்றபட்ட இவரின் கனவு நனவாகப் பிரார்த்திப்போமாக! 27 - 01 - 2002 ஞாயிற்றுக் கிழமை, கலைஞானியின் ஞாபகார்த்தமாக, அவரது சிந்தனைகள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் கூடியிருந்த அடியார்களால் உணரப் பட்டபோது, கலைஞானி தெய்வத்துள் வைக்கப்பட்டார்.

# சந்நிதிப்பதியுறையும் சண்முகனே

கவிமணி **இராசையா ஸ்ரீதரன்**

**பல்லவி**

சந்நிதிப்பதியுறையும் சண்முகனே குகனே
எங்களின் குறை தீர்க்கும் ஏரம்பன் சோதரனே - சந்நிதி

**அநுபல்லவி**

பந்த வினையறுத்து பாசங்களைக் களைந்து
எந்தனைக் காத்திடையா கார்மயில் வாகனனே - சந்நிதி

**சரணம்**

தந்தைக்கு உபதேசம் செய்தவனே முருகா
சிந்தைக்கு இனியவனே சிங்கார வேலவனே
உந்தனைச் சரணடைந்தோம் உமையம்மை பாலகனே
கந்தனே சரவணனே கைதொழுதோம் உனையே.

வெண்ணெயைத் திருடித்தின்ற கண்ணனின் மருமகனே
வள்ளியை மணம் முடிக்க வேடனாய் வந்தவனே
வேழ முகத்தவனின் பாசமுள்ள தம்பி நீயே
பழனிமலை தனிலே ஆண்டியாய் நின்றவனே

அன்னத்தை அடியவர்க்கு அள்ளிச் சொரிபவனே
வன்னமயில் வாகனனே வள்ளிக்கு வாய்த்தவனே
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டாலே
ஓடிடும் வினைகளெல்லாம போய்விடும் பாவங்களே - சந்நிதி

பண்பாடு உருவாவதற்கு காரணம் மனமே ஆகும்.

[ தொடர்ச்சி...

உ

'' உள்ளத்தனையது உயர்வு ''

# சக்தி வழிபாட்டின் சிறப்பு

〉 செல்வி க. சசிலேகா 〉



இன்னும், வேதம் பயிலும் வேதியரும், வீரம் விளைக்கும் வேந்தரும், வான் பொருளீட்டும் வணிகரும், தாளாண்மையிற் சிறந்த வேளாளரும் ஒருங்கே வணங்கும் விழுமிய தெய்வம் அறிவுத் தெய்வமேயாகும். மாந்தரது உள்ளத் தாமரையில் இனிதுறைந்து, அவர் அறிவினுக்கறிவாய் நின்று, புன்னெறி விலக்கி, நன்னெறிகாட்டும் தெய்வம் கலைத் தெய்வமே. மேலோரென்றும் கீழோரென்றும் எண்ணாது, செல்வரென்றும் வறிஞரென்றும் கருதாது, முதியரென்றும் இளைஞரென்றும் பாராது, ''எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அறிவினை விரும்புவோர் அனைவரும் வருக'' என்று அருள் கூர்ந்து அழைத்திடும் தெய்வம் அறிவுத் தெய்வமன்றோ?

இத்தகைய தெய்வத்தை நிறைமொழி மாந்தர் மறைமொழியாற் போற்றினார்கள். அறிவறிந்த மாந்தர் ஆண்டுதோறும் எண்ணும் எழுத்தும் அமைந்த ஏடுகளை வரிசையாக அடுக்கிக்கலை விழா எடுத்தார்கள். விரையுறு நறுமலர் தூவி வணங்கினார்கள். வண்ணமும் சாந்தமும் வழங்கினார்கள் இவ்வாறு ஆண்டு தோறும் நிகழும் நாமகள். விழாவினைக் கண்ட பாரதியார்.

'' செந்தமிழ் மணி நாட்டிடையுள்ளீர்
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!

ஒன்றின் முடிவில், ஒன்றின் ஆரம்பம்

வந்தனம் இவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங்கெளி தன்று கண்டீர்!
மந்திரத்தை முணு முணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி அதன் மேல்
சந்தணத்தை மலரையிடு வோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம்''

என்ற பாடலின் மூலம் கலை வடிவாய நாமகள் விரும்பும் வழிபாடுகள் யாதோ என்று அறிய விரும்புவோர்க்கு நல்வழி காட்டுகின்றார். அபிராமிதேவியின் கடைக்கண் பார்வையொன்றே, செல்வம், கல்வி, தளர்வின்மை, தெய்வவடிவு, நல்லசுற்றம் அன்றியும் மேலும் நல்லனவாகிய எல்லாவற்றையும் தரும் என்று எமக்கு எடுத்துக் கூறியுள்ளார் அபிராமிப்பட்டர்.

'' தனந்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே''

என்கிறது அபிராமி அந்தாதி.

சக்தி வடிவங்களிலே - பிரமனின் தேவியாகவும் வித்தைகளுக்குத் தலைவியாகவும் சரஸ்வதி விளங்குகிறாள். இவ்வடிவத்தின் உருவப் பொலிவினை நாம் நோக்கும் போது, அவளது வெண்ணிறமேனியானது நாம் தூய உள்ளத்தைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் விரிந்த தாமரை, நாம் எப்பொழுதும் பரந்த மனப்பான்மையுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் கரத்திலேயுள்ள படிகமாலை நாம் கற்றதைச் செயற்படுத்த வேண்டும் என்பதையும் கரத்திலேயுள்ள வீணை, நாம் எப்பொழுதும் கற்கும் போது அமைதியும் இனிமையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் கரத்திலேயுள்ள ஏடானது நாம் கற்றது கைம்மண்ணளவு கற்க வேண்டியது உலகளவு என்பதையும் சுட்டுகிறது.

சக்தியினுடைய வடிவங்களிலே துர்க்கை வடிவமானது முக்கியமானது. விஷ்ணுவின் சகோதரி என்ற கருத்தில் இவள், விஷ்ணுவின் சங்கு, சக்கரம் முதலிய ஆயுதங்களை ஏந்திநிற்பாள். இவள், எருமைத் தலையில் நிற்கும் வடிவத்திலும், சிங்கத்தின் மீதமர்ந்த வடிவத்திலும் காட்சி தருவாள். இவளுக்கு, ஒன்பது வகையான வடிவங்களைக் கூறுகிறார்கள். நீலகண்டி, க்ஷேமங்கரி, ஹாரசித்தி, ருத்திரசுசதுர்க்கை, வனதுர்க்கை, அக்கினிதுர்க்கை, ஜெயதுர்க்கை,

விந்தியவிஜயதுர்க்கை, ரிபுமாரிதுர்க்கை ஆகியன அவ் வடிவங்களாகும். அம்பாளுக்கு மூன்று ரூபங்கள் உள்ளன. தூலம் - கரசரணாகதி அவயவங்களோடு கூடியது. சூக்குமம் மந்திர அட்சரங்கள் மயமாயிருப்பது பரம் - வாசனாமயமாயிருப்பது. சக்திதான் தெய்வத்துக்கெல்லாம் தெய்வம் சக்தி இல்லாமல் சிவம்தத்துவம் ஒன்றையும் இயக்கமாட்டாது என்று சாக்தர்கள் கருதுவர்.

சக்திக்கு இரு அம்சங்கள் உள்ளன. ஒன்று, வித்தியை என்னும் சிற்சக்தி. மற்றது, அவித்தியை என்னும் மாயாசக்தி. சிற்சக்தி ஒளிமயமானது. அறிவுமயமானது மாயாசக்தி தன்னை மறைத்து உலகை வெளிக்காட்டுவது. அதுவே, எல்லாவற்றையும் உண்டாக்கும் சக்தி. உண்மையில் கடவுள், ஆணுமல்லர்; பெண்ணுமல்லர் என்று தாந்திரகநூல் கூறுகின்றது. மகானசம்ஹிதை பின்வருமாறு கூறுவதைக் காணலாம். நீ சின்னப் பெண்ணுமில்லை, மங்கையுமில்லை, முதியவளுமில்லை, உண்மையில் நீ பெண்ணுமல்லை, ஆணுமல்லை, அலியுமல்லை உன்னைக் கற்பனை செய்ய இயலாது நீ அளவிடவியலாத ஆற்றல் இருக்கின்ற எல்லாப் பொருள்களுள்ளும் இருக்கும் மூலப்பொருள்; ஒளிமயமாகத்தான் உன்னை அடைய முடியும்.

இந்தச் சக்தியானவள் ஒளிமயமானவள். செந்நிற மேனியையுடையவள். அதாவது, சூரியனும் மஞ்சாடிமலரும், இரத்தின நூலுணர்வு பெற்றோரால் மதிக்கப்படுகின்ற மாணிக்க மணியும், மாதுளம் பூவும், மின்னற் கொடியும், குங்குமக் குழம்பும் போலச் செந்நிற முடையவள்.

"உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே''

என்கிறார் அபிராமிபட்டர்.

இங்கே அபிராமி தேவியினுடைய மேனியின் நிறத்தை வர்ணித்து அதன் பின்னர், இந்தத் தாயே மகாலட்சுமியும், வணங்குகின்ற சிறப்பையுடைய மேலான துணையும் என்றார்.

உ

# வாழ்க்கையிற் சைவத்தின் முக்கியத்துவமும் மனித விழுமியங்களும்

த. சுகந்தன்



மனிதனில் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம் எனச்சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். சைவசமயம் ஒரு வாழ்க்கை நெறியாகும். மனிதர்களை வையத்துள் வாழ்வாங்குவாழ வழிசமைத்துத் தருவது சமயம். சமயம் என்றால் வழி, பாதை, நெறி, மார்க்கம் என்று பொருள்படும்.

வாழ்க்கையில் சைவம் என்னும் போது சிவத்தைச்சார்ந்து நின்று தெய்வீகப் பண்புகளை வாழ்க்கையோடு இணைத்து வாழ்தலாகும். உண்மை, அன்பு, நீதி, தர்மம், சாந்தம், அழகு, நன்மை. இன்னா செய்யாமை முதலியன சிவம் சார்ந்த பண்புகள். மனிதன் மனிதப் பிறவியை எடுத்ததனால் மட்டும் மனிதனாகிவிட முடியாது. சிவம் சார்ந்த மனிதப் பண்புகளை வாழ்க்கையிற் பேணி நடந்து கொள்ளும் போதே மனிதனாகின்றான். சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விரதங்கள் விழாக்கள் பண்டிகைகள், சம்பிரதாயப்பழக்க வழக்கங்கள் பூசை வழிபாடுகள் முதலியன நமது சமய வாழ்க்கையிற் பெரிதும் இடம் பெறுகின்றன. இவை சமய வாழ்விற்கு உதவும் சாதனங்களாகும். இவை மனிதத்தன்மைகளைப் பெற்று மனிதராக வாழ்வதற்கு உதவுகின்றன.

தனியாள் நல்லொழுக்கமுடையவராக மாற்றம் பெறும் அளவிற் சமூகம் ஒழுக்க நிலையில் உயரும். சமயம் காட்டும் நெறியிற் செல்பவர்களே நல்லொழுக்கம் உடையோராகத் திகழ்கின்றனர்.

ஒழுக்கமான வாழ்க்கை வாழ்பவர்களே இறைவனை அடைய முடியும் எனச் சைவம் வலியுறுத்துகிறது. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் வாழ்க்கைப்பயன்கள் அவற்றை அடைவதற்குச்சைவ நெறி காட்டும் பாதையில் நாம் வாழ வேண்டியது அவசியமாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் கூறப் பட்டுள்ளன. அந்த மார்க்கங்களில் நின்று நாம் ஒழுகுதல் வேண்டும்.

கீழ்ப்படிவினால் மற்றவர்களைப் பணிய வைக்கலாம்.

கல்விப்பயன், கற்றபடி ஒழுகுதலாலேயே அடையப்படுகிறது. ' கற்றாங்கு ஒழுகு ' என்பது ஆன்றோர் கூற்று.

அறநெறியில் நின்று கடமைகளை ஒழுங்காகச் செய்தல் ஆன்மீக விடுதலைக்காம் எனச்சமயம் வழி காட்டுகிறது. பொறுப்புக்களை அலட்சியம் செய்யாது அகமும், புறமும் தூய்மையாக விளங்கும் போதே வாழ்வு சிறக்கும். அதனால் மனத்தூய்மை, மொழித்தூய்மை, மெய்த்தூய்மையுடையவராய் வாழ முயல வேண்டும்.

சிவபெருமான் எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர். அநாதி காலந்தொடக்கம் ஆணவ மலத்தொடர்புடைய ஆன்மாக்கள் அம்மல நீக்கம் பெற்று உய்யும் பொருட்டு அவர் எமக்கு இவ்வுடம்பையும் கருவி, காரணங்களையும், உலகங்களையும் நுகர்வுப் பொருட்களையும் தோற்றுவித்துத்தந்துள்ளார். அத்தனையும் தந்த இறைவனுக்கு நாம் கடன்காரர்கள் அல்லவா? ஆதலால் காலை எழுந்தவுடன் நாம் இறைவனை மனத்தால் நினைத்து, வாக்கினால் துதித்து, உடம்பினால் வணங்குவது நமது கடமை. நாம் எந்த நாளும் அவருக்குச்செய்ய வேண்டிய நன்றிக்கடன் இதுவாகும். இவ்வாறு இறைவனை வணங்காமல் இருப்போமாயின் நம்மிலும் நன்றி மறந்த பாதகர் இருக்க முடியுமா?

'' எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு ''

என்னும் திருக்குறளில் செய்ந்நன்றி கொன்றார்க்கு எடுத்துக்காட்டாக நாம் இருத்தலாகாது.

உடம்பையும், உணர்வையும், உயிரையும் , உயரிய மானுடப் பிறவியையும் இன்னோரன்ன பல கருவிகளையும் நமக்குத்தந்த தலைவனை எந்நாளும் சிந்திப்பது வந்திப்பதும் நம் கடனாகும்.

'' தலையே நீ வணங்காய் '' என்றார் அப்பர்

பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, பகைமையுணர்வு என்பவற்றை மனத்திலிருந்து அகற்றி விடுவதன் மூலம் மனம்தூய்மை பெறுகிறது. தூய்மையான மனத்தில் தோன்றுவன நல்லஎண்ணங்கள் நல்லுணர்வுகளாகவே அமையும். அவை எல்லோரையும் வாழ்விக்கும் தன்மையனவாக்கும்.

பண்பாகவும், பணிவாகவும் இனிய சொற்களைப் பேசுவதால் கேட்போர் மகிழ்ச்சியடைவர். நல்லுறவு ஏற்படவும் வழியேற்படும் அப்பேச்சு தமக்கும் பிறர்க்கும் நல்ல பயனைத்தரும்.

இளமை என்பது மனத்தைப் பொறுத்த பருவநிலை.

'' பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற '' என்பது வள்ளுவர் வாக்கு.

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் பிறருக்கு நன்மை பயப்ப தாய் விளங்க வேண்டும். ஒரு சிறு செயல் கூடப் பிறருக்குத்தீங்கு விளைவிக்கக்கூடாது. எந்த ஒரு பணியிலும் சுயநலம் புகுந்து விடல் ஆகாது. கடமைகளைச் செய்வதில் அசிரத்தையும் பலனைப்பெறுவ திற் சிரத்தையும் கொள்ளல் சமய வாழ்விற்குப் புறம்பானது. சைவம் செயல்களில் தூய்மை மிளிர வேண்டும் என்பதை வற்புறுத்து கிறது.

மனித வாழ்க்கையில் உலகியல் தேவைகளுடன் ஆன்மீகத் தேவைகளும் உண்டு. சைவ சமய வாழ்வில் இந்த இரண்டு வகைத் தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன. வாழ்க்கையில் ஆன்மீகம் இல்லையேல் அது முழுமை வாழ்வு ஆகாது. ஆன்மீகமானது இறை சிந்தனையுடன் நேர்மையான மானுடப்பண்புகள் உள்ள வாழ்க்கை யில் மிளிர்கிறது. இறை வழிபாடு சமய அனுட்டானம், தியானம், இறை தொண்டுகள், சமய நூல்களைக்கற்றல், பெரியோரைக்கனம் பண்ணுதல் என்பவற்றில் ஈடுபாடு கொள்வதால் வீண் விவகாரங் களில் எம் மனத்தையோ, புலன்களையோ செலுத்தாது தவிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கருமத்தையும் செய்யத்தொடங்கு முன்னரும் செய் யும் போதும் எங்கும் நிறைந்த இறைவன் அவற்றைக் கண்காணித் துக் கொண்டிருக்கிறான். எதையும் மறைக்க முடியாது என்னும் உண்மையைக் கருத்திற் கொள்ள வேண்டும். அதனால் தீவினைகள் நம்மைச் சேராமல் தடுத்துக்கொள்ளலாம். பாவச்செயல்கள் தீவினை கள் பிறவிகள் தோறும் நம்மைத்தொடர்கின்றன. அவற்றைச் செய் தவர்கள் அனுபவித்தே தீர்க்க முடியும். தீவினைகளால் துன்பங் களே எமக்கு நேரிடுகின்றன. ஆதலால், பாவச்செயல்களைச் செய் யாது தவிர்க்கும் படி சைவம் கூறுகிறது. எனவே நாம் நற்குண, நற்செயல்களிலே ஈடுபடுதல் வேண்டும்.

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமயமே வாழ்க்கை. வாழ்க்கையே சைவம் என்பது ,சைவத்தின் நிலைப்பாடு. மனிதர் சமூகமாக வாழ வேண்டியவர்கள். பிறரில் தங்கியும் பிறரைத்தாங் கியும் வாழ்பவர்களாக மனிதர்கள் உள்ளனர். சமூகத்தவருடன் இசைந்தும், இணங்கியும் முரண்படாமலும் நல்லுறவு பேணியும் வாழ்தல் அவசியமாகின்றது. அந்த நிலையிற், பண்பாடு தேவைப்

படுகிறது. மனம்தான் பண்பாடு உருவாவதற்கு முக்கியமான இடம் மனத்தைப் பண்படுத்துவதற்கும், பக்குவப் படுத்துவதறகும் உறு துணையாவது சமயம்.

சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம் என்னும் நூல், சைவசமயப் பண்பாட்டினைப் பேணி வாழ்ந்த நாயன்மார் களின் உண்மைச் சரித்திரங்களையும், அவர்களின் தன்னலமற்ற தொண்டுகளையும் எடுத்துக் கூறும் ஒரு சமய வாழ்வியல் நூல் ஆகும். அந் நூலில் சேக்கிழார் பல்வேறு நற்பண்புகளையும் எடுத் துக் காட்டியுள்ளார். அதில் தொண்டுள்ளம் கொண்டு, தொண்டு செய்து வாழ்ந்த சிவனடியார்களின் வரலாறுகள், கலங்கரை விளக் கங்களாக நின்று நம்மை நன்னெறிப் படுத்துகின்றன.

எல்லாம்வல்ல எம்பெருமானின் நினைப்பு, எம்மிடம் நீங்காது நிலைபெற வேண்டும். நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் இறைவனின் திருத்தாள்களை எண்ணிக்கொண்டிருப்பதால் நாம் நல்லவற்றையே சிந்தித்து, பேசி நற்செயல்களைச் செய்ய வழியேற்படும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

---

ஒரு எலும்புத்துண்டை ஒரு நாயிடம் விட்டெறியுங்கள். அது அதை வாயில் கௌவிக்கொண்டு திரும்பிப் பார்க்காமல் ஓடி விடும். தனது வாலை ஆட்டாது ஆனால் அதே நாயை உங்கள் அருகில் கூப்பிட்டு அதன் தலையைத்தடவி உங்கள் கையில் உள்ள எலும்புத்துண்டைக் காட்டுங்கள் அது தன் வாலை ஆட்டி ஆட்டி அதைக்கவ்வ வரும். வாலை ஆட்டுவதன் மூலம் அந் நாய் தனது நன்றியைத் தெரிவிக்கிறது.

நாய் கூட தனக்குக் கிடைக்கும் ஆகாரம் மரியாதையுடன் கொடுக்கப்பட்டால் நன்றி செலுத்துவதும் அப்படியில்லா விட் டால் திரும்பிப் பார்க்காமல் போகும் குணத்தை உடையதாக வும் உள்ளது.

அதே போல் நாங்கள் செய்யும் நற்காரியங்களுக்கு நன்றியை எதிர்பார்த்தால், நாம் செய்யும் அச்செயல்களைப் பணிவுடன் செய்தால் அது நல்ல பலனைக்கொடுக்கும்.

அகங்காரத்தை விட்டவனுக்குத் துன்பம் இல்லை.

உ



## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# கீசகன் வதம்

/ சிவத்திரு வ. குமாரசாமிஐயர் /

பாண்டவர்கள் விராடமன்னனது நகரில் எவ்வித சிரமமுமின்றிப் பத்துத் திங்கள் கழித்தனர். அவர்களை எவரும் அடையாளம் கண்டுகொள்ளாத நிலையில் அவர்கள் நிம்மதியாக வாழ்ந்து வரலாயினர். ஆனால், திரௌபதி ஏவற் பெண்ணாக வாழ்ந்து கஷ்டத்தை அனுபவிக்கலானாள். பேரரசியாக இருந்த மெல்லியலாள், விராடமன்னனது மனைவி ஏவும் காரியங்களைச் செய்வதற்குச் சிரமப்பட்டாள். ஆயினும், பொறுமையுடன் தனது நாட்களைக் கழித்துக் கொண்டிருந்த வேளையில் அவளுக்குப் பெரும் சோதனை ஒன்று ஏற்பட்டது.

அரசி சுதேட்டினையின் தம்பியாகிய கீசகன் பாஞ்சாலியின் ஒப்பற்ற வடிவழகைக்கண்டு மையல் கொண்டு அவளைத் துன்பத்துக்குள்ளாக்கினான். கீசகன் மிகவும் பலசாலி. அத்துடன் சேனாதிபதியாகவும் விளங்கினான். விராட மன்னன் வயோதிபனாகவிருந்தமையால், கீசகனின் செல்வாக்கு அரசவையிலே பலமாக இருந்தது. தீயவழியிற் சென்று திரௌபதியை அடைய முயன்றுகொண்டிருந்த அவனைத் தடுப்பார் எவரும் இல்லாது போயினர். தனக்கு ஏற்படப் போகும் ஆபத்தை உணர்ந்த பாஞ்சாலி தன்னைப்பாதுகாக்கும் ஐந்து கந்தர்வர்கள் அவனைக்கொன்று விடுவார்கள் என்று பயமுறுத்திய போதும் கீசகன் அமைதியடையவில்லை. முடிவிற் பாஞ்சாலி கீசகனை அடக்க வல்லவன் பீமனே என்றுணர்ந்து இரகசியமான முறையிற் பீமனைச் சந்தித்து விடயத்தை எடுத்துரைத்தாள். பாஞ்சாலியின் துர்ப்பாக்கியமான நிர்க்கதியான நிலை பீமனை ஆத்திரம் கொள்ளச்செய்தது. எனவே, கீசகனைக்கொல்ல முயற்சி

செய்து முடிவில் பாஞ்சாலியைச் சந்திக்க வருமாறு கீசகனைப் பணிக்கும் படி கூறி, பாஞ்சாலி இருக்கும் இடத்தில் தான் பெண் வேடம் பூண்டிருந்தான். மயக்க நிலையில் இரவு வேளையில் வந்த கீசகனை பீமன் பெரும் யுத்தம் செய்து கொன்றொழித்தான். இதனால், திரௌபதி நிம்மதியாகத் தனது பணிகளைச் செய்த வண்ணம் இருக்கலானாள். மாற்றான் மனைவியை நயக்கும் ஒருவருக்கு இக்கதியே ஏற்படும் என்பதினை எல்லோரும் உணர்ந்து பாஞ்சாலியின் பக்குவ நிலையைப் போற்றினர். ஆயினும் அவளை அந்தப் புரத்தில் வைத்திருக்க அச்சம் கொண்டு வேறெங்காவது செல்லுமாறு பணித்தான் மன்னன். அப்பொழுது திரௌபதி இன்னும் முப்பது தினங்களிற் சென்று விடுவதாகக்கூறி அவ்விடத்திற்றங்கி இருந்தாள்.

## துரியோதனனின் துர்ப்புத்தி

காலத்தைக் கணக்கிட்டு வாழ்ந்து கொண்டிருந்த துரியோதனன் பாண்டவர்களின் வனவாசம் முடிவடைந்தமையையும் அவர்கள் அஞ்ஞாத வாசம் புரிவதையும் உணர்ந்து, அஞ்ஞாதவாச காலத்தில் அவர்களைக் கண்டறிந்தால், நிபந்தனையின் படி அவர்களை மீண்டும் வனவாசத்துக்கு அனுப்பி வைப்பதன் மூலம், தான் நிம்மதியாக இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் வாழலாம் என்ற தீய சிந்தையுடன், அவர்களை அறிந்து கொள்ளப் பெருமுயற்சிகளை மேற்கொண்டான். எல்லா நாடுகளுக்கும் ஒற்றர்களை அனுப்பி எங்காவது தலைமறைவாகப் பாண்டவர்கள் வாழ்கிறார்களா என்பதனை அறியமுயன்றான். ஒற்றர்களால் பாண்டவர்களை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் பெரும் பராக்கிரமம் மிக்கவனாகிய மச்சநாட்டுச் சேனாதிபதியாகிய கீசகன், கந்தர்வர்களால் கொல்லப்பட்டான் என்பதனை அறிந்து, அந்நாட்டிற் பாண்டவர்கள் இருக்கக்கூடும் என்ற கருத்தைச் சொல்லி நின்றனர்.

இச்செய்தியைக் கேட்ட துரியோதனன் அவ்விடத்திற் பாண்டவர்கள் இருக்கிறார்களா என்பதை அறிய யாது செய்யலாம் என்று சிந்தித்து, விராட நாட்டின் மீது படை எடுத்துச்சென்று நாட்டைக் கைப்பற்றுவதன் மூலம் இதனை அறியலாம் என உணர்ந்து போர் தொடுக்க முற்பட்டான். கர்னன் சகுனி முதலானோருடன் ஆலோசனை செய்து சுசர்மா எனும் மன்னனைப் படை நடாத்திச்செல்ல ஆணையிட்டான். மன்னன் சுசர்மாவும் விராட மன்னனின் மச்ச நாட்டை அடைந்து பசுநிரைகளைக் கவரலானான். இடையர்கள் பசு கவர்தலைத் தடுத்து நிறுத்த முயன்றனர். முடியாத நிலை வந்ததும் மன்னன் விராடனிடம் முறையிட்டனர்.

விராட மன்னன் முறையீட்டைக் கேட்டுக் கோபம் கொண்டவனாய்ப் போருக்கு ஆயத்தம் செய்தான். அவ்வேளையில் அரசவையில் கங்கன் எனும் பெயரில் இருந்து வந்த யுதிஷ்டிரர் '' அரசே எனக்குப் போர்த்திறமை உண்டு. வல்லபன், தந்திரிபாலன், தாமக்கிரந்தி ஆகியோரும் போர்த்திறன் மிக்கவர்கள். எங்கள் நால்வரையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள் '' என்று கேட்டுக் கொண்டார். மன்னனும் உடன்பட்டு, நால்வரையும் உடன் அழைத்துச் சென்றான். யுத்தம் நடைபெற்றது போர் மிகவும் உக்கிரமாகி விராடனின் படைகள் தோற்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்நிலையிற் சுசர்மன், விராட மன்னனைச் சிறை செய்தான். இதனைக் கண்ணுற்ற தருமர் பீமனைப் போரிடுமாறு கட்டளையிட்டார். பீமனுக்கும் சுசர்மனுக்கும் கடும் யுத்தம் மூண்டது பீமனுடன் எதிர் நிற்க முடியாது சுசர்மன் பின் வாங்கினான். விராட மன்னன் விடுவிக்கப்பட்டான் பசு நிரைகள் காப்பாற்றப்பட்டன. வெற்றி வாகை சூடிய நிலையில் விராடன் நகர் திரும்ப ஆயத்தமானான்.

விராட மன்னன் தென் திசையிற் போர் செய்த வேளை வடதிசையில், துரியோதனன் சென்று போர் தொடுத்தான். வடதிசைக் காவலர்கள் ஓடிச்சென்று மன்னனிடம் முறையிட்டனர். மன்னன் நாட்டில் இல்லாத சமயம் விராட மன்னனின் இளைய புதல்வனாகிய உத்தரன் மட்டுமே இருந்தான் அவனும் கௌரவர்களை எதிர்க்க முற்பட்டான். தக்க தேர்ச்சாரதி இல்லை என்று கவலை கொண்டான். அப்பொழுது அங்கிருந்த பாஞ்சாலி அர்ச்சுனனைத் தேர்ச்சாரத்தியம் செய்ய வைக்க முயலும் நோக்கில் '' இளவரசே! பிருகன்னளை அர்ச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாக விளங்கியவள். எனவே, அவளைத் தேர் செலுத்தும்படி பணித்து, அவளுடன் புறப்படுங்கள் '' என்று உத்தரனுக்கு உற்சாகமூட்டினாள். உடனே பிருகன்னளையை அழைத்த உத்தரன் '' தேரினைச் செலுத்தி என்னுடன் யுத்த முனைக்கு வருவாயா '' என்று வினாவவே போரின்றி நெடுங்காலம் தோள்கள் சோர்ந்திருந்த பிருகன்னளையாகிய அர்ச்சுனன் அதுவே தக்க தருணம் என்றெண்ணி ஒப்புதல் தந்தான்.

அர்ச்சுனன் பெண் ரூபத்திற் தேரினைச் செலுத்தப் படைகள் கௌரவர்களை எதிர்க்கப் புறப்பட்டன. கௌரவர் படைகளைக் கண்ட உத்தரன் பீஷ்மர், துரோணாச்சாரியார் போன்ற வீராதி வீரர்கள் முன்னிற்பதனைக் கண்டு அஞ்சினான். தன்னாற் போர் தொடுக்க முடியாது என்று தேரினைத் திருப்புமாறும் அர்ச்சுனனைப் பணித்தான் இக்கட்டான நிலையில் இருந்த அர்ச்சுனன் '' உத்தரா, நான் போர் புரிகிறேன், நீ தேரினைச் செலுத்து '' என்று பணித்து

எளிமையைப் பின் தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது

முன்புதாம் ஆயுதங்களை மறைத்து வைத்த வன்னிமரத்தடிக்குத் தேரினை ஓட்டிச் செல்லும்படி பணித்தான். மரத்தில் இருந்த ஆயுதங்களை எடுத்து இது பாண்டவர்களுடையது இதோ அர்ச்சுனனின் காண்டீபமும் இருக்கிறது. இதனாற்போர் புரிந்தால் வெற்றி நிச்சயம் '' என்று கூறிய போது, பாண்டவர்பால் அன்பு கொண்ட உத்தரன் '' பாண்டவர்கள் எங்கு இருக்கிறார்களோ '' என்று அவர்களை நினைத்துக் கவலைப்பட்டான் அப்பொழுது அர்ச்சுனன் '' கவலைப்படாதே உத்தரா! உன்முன் இருக்கும் நான் அர்ச்சுனன், மற்றை நால்வரும் மன்னனுடன் சென்றுள்ளனர். உங்கள் நாட்டில்த் தான் நாம் எமது தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டுள்ளோம் '' என்று கூறலானான். அர்ச்சுனனே தன்னுடன் இருக்கும் பிருகன்னளை என்பதனை அறிந்து கொண்ட உத்தரன் மகிழ்ச்சியும் துணிவும் வரப்பெற்றான். '' தனஞ்சயரே உம்முடன் நாம் இருப்பதனால் எனக்கு ஏற்பட்ட அச்சம் அகன்று விட்டது இனிப்போருக்குச் சித்தமாவோம் '' என்று கூறித்தேரினைச் செலுத்திக் கௌரவ சேனை முன்னாற் சென்று தேரினை நிறுத்தலானான். [ தொடரும்...

01 - 02 - 2002 இல் நடைபெற்ற அளவெட்டி, கும்பழாவளை கும்பாபிஷேக தினத்தையொட்டிய கவிதை

## " புண்ணியம் கிடைக்கும் வந்துபாருங்கள் "

கவினுறு அழகைக் கச்சிதமாகக்
கரைத்து வார்த்து விட்ட ஆலயம்,
காத்திரமான கலைத்துவம் கொழிக்கும்
கீர்த்தி பெற்றதோ ராலயம்
நவிலுறு கதைபல கவிதரு பாடலும்
நயந்தேத்தி வணங்கு மாலயம்
நல்லளவையினில் நீள்கும்பழாவளை
நாடிய வாழ்வளிக்கும்
குவிகர முடையநல் லடியவர் பணிந்திடும்
குலவுயர் கணபதி ஆலயம்
கோடி புண்ணியம் கும்பாபி ஷேகமே
கும்பழாவளையில் கைகூடிற்று
புவியினில் மாருதப் புரவீக வல்லி
பூஜித்துப் பேறு கொண்ட ஆலயம்
புண்ணியம் கிடைக்கும் வந்து பாருங்கள்
புனிதமான பொற்கோயில்.

கே. எஸ். சிவஞானராஜா

உ

# அன்னப்பணிக்கு ஆதரவு நல்கி வரும்
## சமூகஜோதி கரம்பன்
# சிவானந்தசோதி அவர்கள்



கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ் கச்சேரியில் முன்பு பணியாற்றியவரும் இன்று இலண்டனில் வாழ்ந்து கொண்டு இருப்பவருமான உயர்திரு சிவானந்தசோதி அவர்களின் தூய தொண்டினை வாழ்த்த வேண்டியது எமது கடமையாகும். இங்கிலாந்திற்கு பல ஆன்மீகப் பெரியவர்களை அழைப்பித்த பெருமை திரு. சோதி அவர்களைச்சாரும். தமிழகத்து பேரறிஞர்கள் பலர் தமது நூல்களில் இப்பெருந்தகை பற்றி குறிப்பிட்டுள்ளனர். கனடாவில் வெளிவரும் தமிழர் தகவல் நூல் திரு சோதி அவர்களின் பயன் கருதாப்பணிகளை பெருமைப்படுத்தியுள்ளது. பலரது பாராட்டினைப் பெற்று வாழும் சமூகஜோதி எமது சந்நிதியான் ஆச்சிரம அன்னதானப்பணிக்கு வருடா வருடம் பலரை ஊக்குவித்து உதவி வருவது குறிப்பிடத்தக்கது. அவரது தூய பணி தொடர முருகனை வேண்டி வாழ்த்துகிறோம்

சத்தியத்தை வளைக்கலாம் முறிக்க முடியாது.

உ

# 2001 ஆம் ஆண்டு
## ஞானச்சுடர் வாசகர் போட்டியில் இடம் பெற்ற
## வினாக்களுக்கான விடைகள்

1. சும்மா இரு சொல்லற (தை)
2. இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு (தை)
3. முருகப் பெருமான் (தை)
4. அன்பு (பங்குனி)
5. சொரூப நிலை, தடத்த நிலை (பங்குனி)
6. அறம் (சித்திரை)
7. அநாதைச் சிறார்கள் (சுடர் தரும் தகவல் — (சித்திரை)
8. ஆங்கீரஸ முனிவர் (வைகாசி)
9. கைதடி (வைகாசி)
10. கலாயோகி ஆனந்த குமாரசாமி (வைகாசி)
11. கந்தபுராணம் (ஆனி)
12. அருட்கவி சீ. விநாசித்தம்பி (ஆனி)
13. மைத்திரேய மகரிஷி (ஆனி)
14. மருதர் கதிர்காமர் (ஆவணி)
15. நீதியரசர் சிறீஸ்கந்தராசா (ஆவணி)
16. திருமுருகாற்றுப்படை (புரட்டாதி)
17. கௌசிக முனிவர் (புரட்டாதி)
18. பிறரின் குறை, குற்றங்களைப் பார்க்காது தனது குறை, குற்றங் களைக் கண்டு கொள்ள வேண்டும் (புரட்டாதி)
19. உணவு சுவைக்கும் நாட்டத்தைக் குறைத்துக்கொள், ஞான நூல்களைக் கற்கும் நாட்டத்தைப் பெருக்கிக்கொள் (ஐப்பசி)
20. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல் (ஐப்பசி)
21. உலகம் தானாகவே திருந்திவிடும் (ஐப்பசி)
22. தீர்த்த உற்சவம் முடிவடைந்த பின்பு சந்நிதி முருகன் மூலஸ் தானத்திற்குச் செல்லாது வள்ளியம்மன் கோயிலுக்குச் சென்று தங்கியிருக்கின்றார் (ஆடி)
23. செல்வச்சந்நிதித் தலத்திலே ஒரு கற்பாறையிலே பதித்தவர் சந் நிதிமுருகன் (ஆடி)
24. ஆத்மீகம் சார்ந்த மெய்ம்மையான சிந்தனைத் தெளிவு சுடர் தரும் தகவல் (மாசி)
25. ''எல்லாவற்றையும் சுவாமி சாப்பிட்டுவிட்டார்'' (மாசி)

குழந்தைகளை இதயத்தால் நேசியுங்கள்.

உ

சிவமயம்

சந்நிதியான் ஆச்சிரம

சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை நிகழ்த்திய

# மாபெரும் கௌரவிப்பு விழா

மேற்படி விழா 27 - 01 - 2002 ஆம் திகதியன்று சந்நிதியான் ஆச்சிரமத்தில் கோலாகலமாக நிகழ்வுற்றது. அன்று, ஆச்சிரமம் விழாக் கோலம் பூண்டிருந்தது, மங்கள விளக்கேற்றும் வைபவத்தைத் தொடர்ந்து பஞ்சபுராண ஓதுதல் கலாபூஷணம் வ. செல்லத்துரை அவர்களால் நிகழ்த்தப்பெற்றது.

அதனை அடுத்து, வரவேற்புரை நிகழ்த்திய ஞானபண்டித இயலரசு கவிமணி க. முத்துவேலு அவர்கள் தமது உரையில் ஞானச்சுடருக்கான விடய தானங்களை வழங்கிய கட்டுரை ஆசிரியர்களைக் கௌரவித்த இப்பேரவை, வாராந்த நிகழ்வுகளிற் பல்துறைசார்ந்த நிகழ்வுகளை வழங்கிய கல்விமான்களை, கலைஞர்களைக் கௌரவிக்கும் பெருநோக்கில் இவ்விழா நிகழ்த்தப்படுகின்றதென்றும், அறிவுத் தானம் வழங்கிவரும் இவர்கள் யாவரும் எதுவித சன்மானமும் பெறாது தொண்டுள்ளம் கொண்டு நிகழ்வுகளைச் சிறப்பிப்பவர்கள் என்றும் குறித்துரைத்தார்கள்.

1993 இல் அமைக்கப்பெற்ற இப்பேரவை இவ் ஆச்சிரம நிர்வாகி, செ. மோகனதாஸ் சுவாமிகளின் ஞான குருவாகிய ஸ்ரீ மு. மயில்வாகனம் சுவாமிகளின் அருளினால், குரு பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ள ஆச்சிரம சுவாமிகளின் நெறிப்படுத்துகையினால் உலகளாவிய இரீதியிற் புகழ்பரப்பி வருவதையிட்டு யாவரும் பெருமிதம் அடைய வேண்டியவர்களாக உள்ளோம் என்று கூறினார்கள்.

கௌரவிப்புக்குரிய நூற்றுவர் வரையிலானோர், பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா, ஆசிரியர்களான திரு. ஆ. சிவநாதன், சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள், திரு. ஆறு. திருமுருகன் ஆகியோரால் பொன்னாடை போர்த்தி கேடயங்களும் வழங்கப்பெற்றுக் கௌரவிக்கப் பெற்றார்கள். ஏற்புரையினையும் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்களே வழங்கினார்கள்.

அதனையடுத்து, ஸ்ரீ முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் ஆன்மார்த்த சீடரும் சந்நிதியான் ஆச்சிரம மூலகர்த்தாவுமாகிய ஸ்ரீ. செ. மோகனதாஸ் சுவாமிகளுக்குச் சைவத்தமிழர் சார்பில் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்களால் **அமுத கலா யோகி** என்னும் விருதும் சந்நிதியான் ஆச்சிரமத்துக்கான வாழ்த்தும் வழங்கப் பெற்றன. அதனைத் தொடர்ந்து கலைஞானி மாமனிதர் அ. செல்வரத்தினம் அவர்களின் 31-ம் நாள் நிகழ்வும், தை மாத ஞானச்சுடர் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

---

லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளை நிறுவனம் வழங்கும்

# அன்னையர் குடியிருப்பு இல்லம் பெற்றுக்கொண்டோர் விவரம்

01) திருமதி புஷ்பமலர் இரகுபாலமுருகன் — கைதடி
02) திருமதி செல்வநந்தினி ரஞ்சனாதேவா — சுன்னாகம்
03) திருமதி செல்வராணி ரவீந்திரன் — வேலணை
04) திருமதி ஞானலட்சுமி சிவசாமி — தேவி இல்லம் முதலாம் கட்டை பருத்தித்துறை
05) திருமதி புஷ்பநாயகி மோகனதாஸ் — வதிரி, கரவெட்டி


நம்பிக்கைப் பொறுப்பாளர்,
சிவயோகம் - அறக்கட்டளை சார்பில்
ஆறு. திருமுருகன்

கந்தரோடை,
சுன்னாகம்.

உ

# சந்நிதியான்

/ ந. அரியரத்தினம் /



மருதர் கதிர்காமர் சந்நிதி முருகனால் ஆட்கொள்ளப்பட்டதும் அவரையே தனக்குப் பூசை செய்யுமாறு பணித்ததும் சந்நிதி ஆலயத்தில் இடம் பெற்ற ஒரு முக்கியமான வரலாற்று நிகழ்வாகும். இவ்வாறு 30 - 05 - 1840 ஆம் ஆண்டு பூசையை மேற்கொள்ள ஆரம்பித்த மருதர் கதிர்காமரின் சந்ததியினரே இன்றும் பூசகர்களாகக் கடமை புரிந்து வருகின்றனர்.

மருதர் கதிர்காமர் மட்டுமன்றி அவர் சந்ததியில் தோன்றித் தற்பொழுது பூசை செய்து கொண்டிருக்கின்ற பூசகர்கள் பலர்கூடச் சந்நிதியானின் அருட்கட்டளைகள், காட்சிகள் என்பவற்றிற்குட் பட்டு ஆலயத்திற்காகவே தங்களை அர்ப்பணித்துப்பூசையை மேற் கொண்டு வருகின்றனர்.

பொறுமைக்குச் சமமான பண்பு வேறில்லை.

இன்னும் சிலர் பிறக்கும் பொழுதே சந்நிதியானுக்குப் பூசை செய்து பணி புரிய வேண்டுமென்ற வகையில் அற்புதமான நிகழ்வு களுடன் பிறந்து தற்பொழுதும் பூசை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு அற்புதமான காட்சிகளுடனும், அங்க அடையாளங்களுட னும் பிறந்து பூசை மேற்கொண்டு வருபவர்தான் சின்ன ஆறுமுக சாமி ஐயர் என எல்லோராலும் அழைக்கப்படும் ஆறுமுகசாமி ஐயராவார்.

சின்ன ஆறுமுகசாமி ஐயர் பிறக்கின்ற பொழுதே சந்நிதியா னின் பூசகராக இருந்து தொண்டாற்ற வேண்டியவர் என்பதற்குரிய காட்சிகளும், அடையாளங்களும் மிகவும் துல்லியமாகச் சந்நிதியா னால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சின்ன ஆறுமுகசாமி ஐயரின் தாயாரின் பெயர் திருமதி க. வள்ளிப்பிள்ளை ஆவார். இவர் சின்ன ஆறுமுகசாமி ஐயரை வயிற் றில் வைத்திருந்த பொழுது பிரசவ வேதனையால் மிகவும் கஷ்டப்பட்டுள்ளார். அது மட்டுமன்றிப்பிரசவ வேதனையால் துடித்த பொழுது சந்நிதி முருகனது நாமங்களையே வாயில் உச்சரித்து அதன் மூலம் தனது வேதனையைப்போக்க முயற்சித்துள்ளார். இவ் வாறு சந்நிதி முருகனைப்பலமுறை கூவி அழைத்துத் தன்னுடைய வேதனையைப்போக்க முயற்சித்தவர் சிறிது நேரத்தில் வேதனை குறைவடைய அப்படியே கண் அயர்ந்து விட்டார்.

அப்பொழுது வாயில் பெரிய சுருட்டுப்பற்றவைத்த படி திறந்த காரில் ஒரு வைத்தியர் வந்து இறங்கினார் அவர் திருமதி வள்ளிப் பிள்ளை அவர்களின் வேதனைக்கு வேண்டிய சிகிச்சை அளித்து வேதனையைக்குறைப்பதற்கு மருந்து கொடுத்து விட்டுப்பின்வருமாறு கூறினார்.

''என்னுடைய வாட்டிலை பலவகையான வருத்தக்காரரும் தங்கி இருக்கினம். இவர்களை எல்லாம் அங்கே தவிக்கவிட்டு நான் இங்கே அடிக்கடி வந்து பார்க்க முடியாது. காசு கட் டிக் கூப்பிட்டபடியால் நான் வந்தனான். நான் தந்த மருந் துக்கு உடனே மூன்றில் ஒருபங்கு வருத்தம் மாறும் மிகுதி படிப்படியாகக் குறைந்து விடும் எனக்கூறி விட்டு யார் வந்து வைத்தியம் பார்த்தது என்று எவரும் கேட்டால் பெரிய மானிப்பாய் வைத்தியர் தம்பித்துரைச்சாமி வந்தவர் என்று கூறுங்கோ எனச்சொல்லி விட்டு மீண்டும் சுருட்டை வாயில் வைத்தபடி காரில் ஏறிச்சென்று விட்டார்''

ஆம் திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை அவர்களுக்குச் சந்நிதியான் கனவிலே காட்சி தந்து தனது திருவிளையாடல்களை அங்கே காண்பித்துள்ளான்.

சாதாரண வைத்தியசாலைகளை விட மகப்பேற்று விடயங்களுக்கு மானிப்பாய் வைத்தியசாலை சிறந்ததாக அக்காலத்தில் கருதப்பட்டது. இங்கே பெரிய மாணிப்பாய் என்று குறிப்பிட்டதன் மூலம் எல்லாவற்றையும் விடப்பெரிய ஆஸ்பத்திரியாக அல்லது இறுதி ஆஸ்பத்திரியாகக்கருதப்படும் சந்நிதி ஆலயம்தான் தனது இருப்பிடம் என்பதையும் அங்கே இருந்து தான்வந்திருப்பது பற்றியும் சந்நிதியான் திருமதி கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளைக்குத்தெரியப் படுத்தியுள்ளான்.

இவ்வாறு சந்நிதியான் காட்சி கொடுத்து அருள் வாக்குக்கள் கொடுத்தபடி திருமதி வள்ளிப்பிள்ளையின் அசாதாரண வேதனை குணமடைந்து சாதாரணமாக மகப்பேற்றை எதிர் நோக்கும் ஒரு பெண் என்ற நிலையில் அவர் காணப்பட்டார்.

பெரியதம்பித்துரைச்சாமி என்ற பெயருடன் சந்நிதியான் காட்சி கொடுத்துச் சென்று ஏறத்தாழ பத்து நாட்களின்பின் திருமதி க. வள்ளிப்பிள்ளை அவர்களுக்குப் பிரசவவேதனை தோன்றியது. கெருடாவிலைச் சேர்ந்த மருத்துவமாது ஒருவரை அழைத்துக்குழந்தைப் பேற்றுக்கான முன் ஆயத்தங்களில் ஈடுபட்டனர்.

அந்தச்சந்தர்ப்பத்தில் தற்பொழுது பிரதம பூசகர்களில் ஒருவராகக் கடமையாற்றும் சிவசண்முகஐயர் அவர்களின் தந்தையான ஆறுமுகசாமிஐயர் அவர்கள் பிரசவத்தை எதிர்நோக்கியிருக்கும் திருமதி வள்ளிப்பிள்ளை அவர்களின் கணவரான திரு. சு. கணபதிப் பிள்ளை அவர்களிடம் வந்து பிறக்கப்போகும் குழந்தைபற்றிய தரிசனங்கள் தனக்குக் கனவிலே தென்பட்டதென்றும் அக்குழந்தை ஆண் மகவாகப்பிறப்பதுடன் அக்குழந்தை ஆறுமுகக் கடவுளுக்குரிய சில அடையாளங்களுடன் தான் பிறக்கும் எனவும் அக்குழந்தைக்கு ஆறுமுகசாமி என்றே பெயரை வைக்குமாறும் கூறிச்சென்றார்.

இவ்வாறு ஆறுமுகசாமி ஐயர் கூறிச்சென்ற இரண்டாம் நாள் திருமதி க. வள்ளிப்பிள்ளை அவர்களுக்குக் குழந்தை பிறந்தது. திரு. சு. கணபதிப்பிள்ளை அவர்கள் மருத்துவிச்சியின் மூலம் ஆண் குழந்தை பிறந்துள்ளதை உறுதிப்படுத்தியதுடன் அக்குழந்தையில் ஏதாவது விஷேட அடையாளங்கள் இருக்கின்றனவா எனவும் விசாரித்தார்.

அதற்கு மருத்துவிச்சி அவ்வாறான அடையாளங்கள் எதுவும் தனக்குத் தெரியவில்லை எனப்பதில் அளித்தார். ஆனால் திரு சு. கண பதிப்பிள்ளை அவர்கள் மருத்துவமாதுவிடம் திரும்பவும் குழந்தை யில் அங்க அடையாளங்கள் இருக்கின்றனவா என்பதைக்கவனமாகப் பார்வையிட்டுக் கூறுமாறு கேட்டுக்கொண்டார். அப்பொழுது மருத் துவமாது கூர்மையாகக் குழந்தையின் உறுப்புக்களைக்கவனித்த பொழுது பிறந்த குழந்தையின் இரண்டு பெருவிரல்களிலும் மும் மூன்று சிறிய விரல்களாக மேலதிகமாக ஆறுவிரல்கள் இருப்பதை அப்பெண் அவதானித்தார்.

ஆம்! சந்நிதியானிடம் அதிகம் ஈடுபாடு கொண்டவரும் எல் லோராலும் மதிக்கப்படுபவருமான ஆறுமுகசாமி ஐயருக்குச் சந்நிதி யான் கனவிலே காண்பித்த தரிசனம் நிஜமானது குழந்தை ஆண் மகவாகவும் மேலதிகமாக ஆறு விரல்கள் கொண்ட குழந்தையாக வும் காட்சியளித்தது.

பெற்றோர்கள் பிறந்த குழந்தை சந்நிதியானுக்குத் தொண்டு செய்வதற்காகவே பிறந்துள்ளது. என்பதை அப்பொழுதே உணர்ந்து கொண்டனர் அதுமட்டுமன்றிக் குழந்தைக்கு ஆறுமுகசாமிஐயர் என்றே பெயரையும் சூட்டினார்கள்.

அவர்தான் இன்று சின்ன ஆறுமுகசாமிஐயர் என்று அழைக்கப் படுகின்றார். ஏற்கெனவே இருந்த ஆறுமுகசாமி ஐயருக்குக்கனவிலே தரிசனம் கிடைத்து இந்தக்குழந்தை பிறந்ததனாலும் தரிசனத்திற் குறிப்பிட்டதற்கிணங்கவும் சின்ன ஆறுமுகசாமிஐயர் என்றே இவர் எல்லோராலும் இன்றும் அழைக்கப்படுகின்றார்.

தற்பொழுது சந்நிதி ஆலயத்தில் நித்திய பூசைகள், விஷேட தினங்கள், உற்சவகாலம் என்பவற்றில் எல்லாம் சின்ன ஆறுமுகசாமி ஐயர் அவர்களின் பங்கும் பணியும் மிகவும் மகத்தானது. அவர் மட் டுமல்ல அவரின் குடும்பமே சந்நிதியானுக்குத்தொண்டு செய்வதில் தம்மை முற்றாக ஈடுபடுத்தியுள்ளது.

ஒரு மூத்த பூசகராகவும் தனித்துவமான அம்சங்கள் கொண்ட வராகவும் விளங்கும் சின்ன ஆறுமுகசாமிஐயர் அவர்கள் சந்நிதி யானுடைய பல்வேறு திருவிளையாடல்களைத் தன் வாழ்க்கையில் அனுபவித்து, அகமகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்.

எல்லாம் அவன் வழிப்படியே நடக்கும் என்பதை நன்கு உணர்ந்து தனது வாழ்க்கைப் பயணத்தை ஓட்டிச்செல்கின்ற ஒரு பெருமகனாக ஆறுமுகசாமிஐயர் அவர்கள் விளங்குகின்றார்கள்.

ஓம் முருகா!

உ

2002 - 03 - 23 இல் மணிவிழாக் காணும்

யாழ் / பல்கலைக்கழக உபவேந்தர்

# பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

## அவர்களைச்

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை

## வாழ்த்திய வாழ்த்துப்பா



**( வெண்பா )**

ஆன்ற அறிவுடனே ஆளுமையும் மிக்கவராய்ச்
சான்றோன் எனத்தகு சால்புடையார் — மேன்மையார்
பாலசுந்த ரம்பிள்ளை பண்பார் மகிபன்
காலமெல்லாம் வாழ்க களித்து.

**( பல்லவி )**

வாழ்த்துகின் றோம்உப வேந்தர் ஐய,
வாழிய நீடூழி வாழி பெரிதெனவே
( வாழ்த்துகின்றோம் )

**( அநுபல்லவி )**

யாழ்பல் கலைக்கழக உபவேந்த ராய்த்திகழ்ந்து
யாணர் துறைபலவும் யாப்புற மிளிரவைப்போய்,
ஏழ்கடல் சூழ்புவி எங்கணும் புகழ்பெருக்கி
இன்பும் மகிழ்வுமாய் என்றென்றும் வாழ்கவென
( வாழ்த்துகின்றோம் )

சிறந்த தர்மம் சுயநலமற்ற சேவை.

( சரணம் )

1. புவியியற் பேரா சிரிய ராய்த் திகழ்ந்து
போற்றிபெறு கலைப்பீட அதிபதி யாய்மிளிர்ந்து
தவிசதனை அலங்கரித்த சான்றாண்மை மிக்கோயே
தன்னிகரில் பேர்புகழாய்ச் சதாகாலம் வாழ்கவென
( வாழ்த்துகின்றோம் )

2. யாழ்பல் கலைக்கழக வளாகமே யாவுளவாம்
யாவற் றினும்இவண் யௌவனம் பொலியவைப்போய்
வாழ்வதற்காம் சமுதாயம் வளமாக வாழ்வதற்காய்
மனம், மொழி, மெய்யெல்லாம் அர்ப்பணம் செய்து நிற்போய்
( வாழ்த்துகின்றோம் )

3. மணிவிழாக் காணுகின்ற மகத்துவமாம் இந்நாளில்
மாண்புமிகு நின்புகழை மனதார, நாவார
அணிபெறவே வாழ்த்துகின்றோம் ஆயிரம் பிறைகாண்
அகவை தனைவிஞ்சி வாழ்க, வாழ்கவென
( வாழ்த்துகின்றோம் )

---

அழகான மலர்களில் பொதிந்திருக்கும் தேனை தேனீக்கள் தேடிச்சென்று அவற்றைஎல்லாம் சேகரித்து ஓரிடப்படுத்தி சேமித்து வைப்பதைப் பார்க்கின்றோம். இதேபோன்று சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையும், ஆத்மீகத் துறையில் ஆற்றல் உள்ளவர்களை எல்லாம் இனங்கண்டு, அவர்களை நாடிச் சென்று அவர்களிடம் பொதிந்திருக்கும் அரிய ஆத்மீகக் கருத்துக் களை; வாராந்த வெள்ளி நிகழ்வுகள் மூலமும், ஞானச்சுடர் மூல மும் மனிதகுல மேன்மைக்காக வழங்கிக்கொண்டிருப்பது ஒரு மகத் தான தர்மம் நிறைந்த பணியாகும்.

பங்களிப்பாளர்களுக்கான தை மாதம் இடம்பெற்ற
பாராட்டு விழாவில்
திரு. தி. சிவதெட்சணாமூர்த்தி

உ

# முருகேச சுவாமிகளின்
# ஐந்தாவது குருபூசைத் தினம்

சந்நிதியில் அருளாளர்களாக வாழ்ந்தவர்கள் வரிசையில் காத்திரமான இடத்தைப்பெறுகின்ற ஒருவராக முருகேசு சுவாமிகள் விளங்குகின்றார்கள். அன்னாரின் குருபூசைத்தினம் எதிர்வரும் 22 - 03 - 2002 வெள்ளிக்கிழமை இடம் பெறும்.

இவர் வர்த்தகராக வாழ்ந்த வாழ்க்கை, இவருக்கு ஏற்பட்ட புற்று நோய் குணப்படுத்தப்பட்ட முறை, அதன் பின்பு சந்நிதியானுடன் கொண்டிருந்த தொடர்பு என்பன எல்லாம் இவர் முற்பிறப்பிலிருந்தே சந்நிதியானுடன் தொடர்புள்ளவராக விளங்கியுள்ளார். என்பதை எமக்கு நன்கு புலப்படுத்துகின்றன.

சந்நிதியில் அருள் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தாலும் பல்வேறு இடங்களுக்கும் சென்று மக்களைப் பக்தி மார்க்கத்தில் இணைப்பதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள், அதனால் பலரின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட சம்பவங்கள் எல்லாம் இன்றும் அந்த மக்களால் நன்றிப்பெருக்குடன் நினைவு கூரப்படுகின்றன.

சந்நிதி ஆலயத்தைப் பொறுத்தவரை அதனது திருப்பணிவேலைகள், அங்கே இடம்பெறும் பூசைகள், விஷேட அபிஷேகங்கள் நடைபெறுவதற்குப் பலரை ஆற்றுப்படுத்துதல் போன்றவை அவரின் இடைவிடாத இறைதொண்டுகளாக இடம்பெற்ற விடயங்களாகும்.

இதேபோன்று, சந்நிதியான் ஆச்சிரமத்தின் கட்டுமானப்பணிகள், நித்திய அன்னதானப்பணிகள் என்பவற்றிலும் அவரின் பங்களிப்புக்கள் எங்களால் என்றும் நினைவிற் கொள்ளத்தக்கவையாகும்.

22 - 03 - 2002 வெள்ளிக்கிழமை ஆலயத்தில் விஷேட அபிஷேகத்துடன் சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகள் ஆரம்பமாகும். அன்பர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு அழைக்கின்றோம்.

— சந்நிதியான் ஆச்சிரமம்

எந்தச் சந்தர்ப்பத்திலும் உத்தமனாகவே இரு.

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

01 - 03 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. சி. துரைராசா ( இசைமணி )

**விடயம் : ' பண்ணிசை '**

வழங்குபவர் : திரு. சி. தில்லைமணி

[ நல்லை ஆதீன ஓதுவார் யாழ். மி பகுதி ]

வயலின் : பிரம்மஸ்ரீ ப. தியாகராஜசர்மா

மிருதங்கம் : வித்துவான் ச. ஹரிகரன்

---

08 - 03 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திருமதி பா. கணேசதுரை

[ ஆசிரியர், மகாஜனக்கல்லூரி ]

சித்திரம் : 'அன்பினில் விளைந்த ஆரமுது'

வழங்குபவர்கள் : திருமதி கோகிலா மகேந்திரன் குழுவினர்

[ உதவிக்கல்விப்பணிப்பாளர், வலிகாம வலயம் ]

---

15 - 03 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : செல்வன் T. கருணாகரன்

சொற்பொழிவு: ' இலக்கியம் காட்டும் நெறி '

வழங்குபவர் : செல்வன் S. செந்தூர்செல்வன்

---

22 - 03 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு. ஐ. அரசபிள்ளை [பேரவை உறுப்பினர்]

சொற்பொழிவு: **' கடவுள் வடிவம் '**

வழங்குபவர் : திரு. அ. குமாரவேல்

[ விரிவுரையாளர், யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை ]

---

29 - 03 - 2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# பங்குனி - 2002

வெளியீட்டுரை : பண்டிதர் சி. வேலாயுதம்

மதிப்புரை : செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்

[ ஆசிரியர், ஸ்கந்தா ]

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2002 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2003 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.